நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வீராணம் ஏரியைத் தூர்வார வேண்டும்: விவசாயிகள் எதிர்பார்ப்பு**

கடலூர் மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய ஏரியான வீராணம் ஏரி தற்போது போதிய நீரின்றி உள்ளது. எனவே, நீரில்லாத போதே ஏரியைத் தூர்வாரும் பணியை விரைந்து தொடங்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் காட்டுமன்னார்கோவில் அருகே வீரநாராயணன் ஏரி என்கிற வீராணம் ஏரி உள்ளது. மேட்டூரிலிருந்து திறந்துவிடப்படும் நீர் கல்லணை வழியாகக் கீழணையை வந்தடையும். கீழணையிலிருந்து வடவாறு வழியாக வீராணம் ஏரிக்கு நீர் வந்து சேரும். மேலும் அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் பெய்யும் மழைநீர் செங்கால் ஓடை, கருவாட்டு ஓடை, பாபாக்குடி ஓடை மற்றும் காட்டாறுகள் மூலம் ஏரிக்கு நீர் வரும்.

வீராணம் ஏரியின் மூலம் சுமார் 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் வேளாண் பாசனம் நடைபெறுகிறது. தமிழகத்துக்கான காவிரி நீரைக் கர்நாடகம் திறந்து விடாததால், மேட்டூரில் நீர்மட்டம் குறைந்தது. மேட்டூரிலிருந்து நீர் திறந்துவிடப்படாததாலும், பருவ மழை பெய்யாததாலும் நீர்வரத்து இல்லாமல், ஏரியின் நீர்மட்டம் குறைந்து காட்சியளிக்கிறது.

ஏரியின் நீர் மட்டம் மொத்த கொள்ளளவு 47.50 அடியாகும்(1465 மில்லியன் கனஅடி). கடல் மட்ட அளவு 31.90 அடி போக, அதிகபட்சம் 15.60 அடி நீர்மட்டம் கொள்ளளவாக உள்ளது. தற்போது 7 அடிக்கு குறைவாகவே நீர் உள்ளது. நீர் இல்லாததால் ஏரியிலிருந்து சென்னைக்கு குடிநீர் அனுப்புவதும் நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது வீராணம் ஏரியில் கொள்ளளவு குறைந்துள்ளதால், ஏரியைத் தூர்வாரி மேற்கு கரை பகுதியைப் பலப்படுத்த ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்து சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதற்குக் கடலூர் மாவட்டத்தில் உள்ள காவிரி டெல்டா கடை பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

அதே வேளையில், தற்போது நீரில்லாமல் உள்ள நேரத்தில் வீராணம் ஏரியில் தூர்வாரும் பணியை விரைந்து தொடங்க வேண்டும். மழை தொடங்கி நீர்வரத்து அதிகமானால் தூர்வாரும் பணி பாதியிலேயே நிறுத்தப்பட்டு அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை வீணாகிவிடும். எனவே வீராணம் ஏரியை கோடைக் காலத்திலேயே விரைந்து தூர்வாருவதற்கு முதல்வர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் சங்கத் தலைவர் கே.வி.இளங்கீரன் தெரிவித்தார்.

இது குறித்து கொள்ளிடம் வடிநிலக் கோட்ட பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செல்வகுமாரிடம் கொண்டு கேட்ட போது அவர் தெரிவித்தது:

முதல்வர் அறிவிப்பை அடுத்து வீராணம் ஏரியைத் தூர்வாருவது குறித்து திட்ட அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான அரசாணை வெளியிட்டு, டெண்டர் விடப்பட்டு வீராணம் ஏரி தூர்வாரும் பணி தொடங்க ஒரு மாத காலமாகும்.

பணி தொடங்கப்பட்டு மழை தொடங்கினால், மீதமுள்ள பணிகள் அடுத்த ஆண்டு செயல்படுத்தப்படும். ஏரி தூர்வாரும் போது மேற்கு கரையைப் பலப்படுத்த பயன்படுத்தப்படும் மண் போக மீதமுள்ள வண்டல் மண்ணை குறைந்த கட்டணத்தில் அப்பகுதி விவசாயிகள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் என்றார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 29.71 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 29.71 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 237 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.13 டி.எம்.சி.

**தென்னை மரங்களை சேதப்படுத்திய யானைகள்!**

பவானிசாகர் அருகே செவ்வாய்க்கிழமை தோட்டத்துக்குள் புகுந்த யானைகள் அங்குள்ள தென்னை மரங்களை சேதப்படுத்தியுள்ளன.

பவானிசாகர் வனக்கோட்டத்தில் ஏராளமான யானைகள் உள்ளன. வனப்பகுதியில் தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் யானைகள் புகுந்து பயிர்களை நாசப்படுத்தி வருகின்றன. சமீபத்தில் கிராமங்களுக்குள் புகுந்த யானைகள், அங்கு பயிரிடப்பட்டிருந்த கரும்புகளை நாசப்படுத்தின. இதையடுத்து அங்கு வந்த வனத்துறையினர் பட்டாசு வெடித்து காட்டுக்குள் விரட்டினர்.

இந்நிலையில், அம்மாபாளையம் கிராமத்தில் ரமேஷ் என்பவரின் தோட்டத்துக்குள் செவ்வாய்க்கிழமை அதிகாலை யானைகள் புகுந்தன. பின்னர் அங்கு பயிரிடப்பட்டிருந்த தென்னை மரங்களை மிதித்து சேதப்படுத்தின. யானைகளின் நடமாட்டத்தை பார்த்த கிராம மக்கள் தீப்பந்தத்துடன் யானைகளை விரட்டினர்.

இதைத்தொடர்ந்து அங்கு வந்த வனத்துறையினர், யானைகள் மீண்டும் வராமல் தடுக்க போதிய நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

**கரும்புக் காட்டில் தீவிபத்து**

கோபி அருகே கரும்புக் காட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆயிரக்கணக்கான மதிப்பிலான கரும்பு சேதமடைந்தது.

கோபியை அடுத்த காசிபாளையம், கிருஷ்ணா நகர் பகுதியைச் சேர்ந்தவர் வாசுதேவன்(48), விவசாயி. இவரது தோட்டத்தில் 4 ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிட்டிருந்தார். கரும்பு நன்கு முற்றிய நிலையில் அறுவடைக்குத் தயாராக இருந்தது. இந்நிலையில் இவரது கரும்புக் காட்டில் சனிக்கிழமை திடீரென தீப்பிடித்தது. உடனடியாக கோபி தீயணைப்புத் துறையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. நிலைய பொறுப்பு அலுவலர் ராஜன் தலைமையிலான தீத்தடுப்புக் குழுவினர் விரைந்து சென்று தீ மேலும் பரவாமல் தடுத்தனர்.

**நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் 3 மடங்கு மகசூல்: வேளாண் உதவி இயக்குநர் முகமது அஸ்லம் தகவல்**

நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு விவசாயம் செய்தால் 3 மடங்கு மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குநர் முகமது அஸ்லம் கூறினார். ராணிப்பேட்டை அருகேயுள்ள முகுந்தராயபுரம் ஊராட்சிக்குட்பட்ட நெல்லிகுப்பத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில், அவர் மேற்கண்டவாறு கூறினார். இதையடுத்து, விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களை வாலாஜா ஒன்றியக் குழுத் தலைவர் வி.கே. நிர்மலா வழங்கினார். மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் விஜயா செல்வம், ஒன்றியக் குழு உறுப்பினர் விஜயகுமாரி செல்வகுமார், முகுந்தராயபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணவேணி ரங்கநாதன், துணைத் தலைவர் நீலமேகம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். விவசாயிகளுக்கு வட்டார வேளாண்மை அலுவலர் ராஜாமணி, தோட்டக்கலைத் துறை அலுவலர் ஊரப்பன், வேளாண் வணிக அலுவலர் சந்திரசேகர், வேளாண்மை பொறியியல் துறை இளநிலைப் பொறியாளர் பச்சையப்பன், பட்டு வளர்ச்சித் துறை அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர் அய்யப்பன் ஆகியோர் விளக்கங்களை அளித்தனர்.

**இன்று உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்கள்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதன்கிழமை (மே 15) நடைபெறும் உழவர் பெருவிழாக்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி அழைப்பு விடுத்துள்ளார். திருவண்ணாமலை ஒன்றியம் கல்லணை, கீழ்கரிப்பூர், இசுக்கழிகாட்டேரி, துரிஞ்சாபுரம் ஒன்றியம் குன்னுமுறிஞ்சி, கிளியாபட்டு, கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் வழுதலங்குணம், கழிக்குணம், செங்கம் ஒன்றியம் அந்தனூர், மேல்செங்கம், தண்டராம்பட்டு ஒன்றியம் குங்கிலிநத்தம், அப்புநாயக்கன்பாளையம், புதுப்பாளையம் ஒன்றியம் மேல்தட்டியாப்பட்டு, கீழ்தட்டியாப்பட்டு, போளூர் ஒன்றியம் துளுவப்பகிரி உள்ளிட்ட கிராமங்களில் புதன்கிழமை காலை 10 மணிக்கு உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன. இதேபோல, கலசப்பாக்கம் ஒன்றியம் கோவிலூர், சேத்துப்பட்டு ஒன்றியம் செய்யானந்தல், நம்பேடு, ஆரணி ஒன்றியம் கொளத்தூர், மேற்கு ஆரணி ஒன்றியம் பழையூர், வந்தவாசி ஒன்றியம் கொவளை, வெண்மந்தை, எய்ப்பாக்கம், தெள்ளாறு ஒன்றியம் தக்கண்டராயபுரம், கண்டவரட்டி, பெரணமல்லூர் ஒன்றியம் பெரணமல்லூர், சோழவரம், செய்யாறு ஒன்றியம் ஆராத்ரிவேலூர், தேவநாத்தூர், அனக்காவூர் ஒன்றியம் ஆரத்தூர், தென்கலப்பாக்கம், வெம்பாக்கம் ஒன்றியம் புலிவலம், சுனைப்பட்டு, பூந்தண்டலம் ஆகிய கிராமங்களில் புதன்கிழமை காலை 10 மணிக்கு உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவ் விழாக்களில் வேளாண் உற்பத்தியை

இருமடங்காகவும், விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காகவும் உயர்த்துவது குறித்த தொழில்நுட்பங்கள் சொல்லித்தரப்படுகின்றன. வேளாண் கண்காட்சியும் இடம்பெறுகிறது. எனவே, விவசாயிகள் தங்கள் பகுதியில் நடைபெறும் உழவர் பெருவிழாக்களில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

**அதிக ரசாயன உரங்களைப் பயன்படுத்தாதீர்: வேளாண்மை உதவி இயக்குநர் எச்சரிக்கை**

தேவைக்கு அதிகமான ரசாயன உரங்களைப் பயிர்களுக்கு பயன்படுத்தாதீர் என்று வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராஜ் விவசாயிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

மேற்குஆரணி ஒன்றியம், தெள்ளூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் பண்ணைப் பள்ளி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி திங்கள்கிழமை அளிக்கப்பட்டது. பயிற்சியில் 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

இதில் வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராஜ் தலைமை தாங்கிப் பேசியது: அதிக அளவு உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயிர்களுக்கு பயன்படுத்துவதால் உணவு தானியங்கள் நச்சுத்தன்மை பெற்றுவிடுகின்றன.

மேலும் மண் வளம் பாதிக்கப்படுகிறது. மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் அழிவதோடு, பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சிகளும் அழிக்கப்படுகின்றன.

எனவே விவசாயிகள் தேவைக்கு அதிகமான ரசாயன உரங்களையும், பூச்சிக்கொல்லி மருந்துகளையும் பயன்படுத்த வேண்டாம் என்று அவர் எச்சரித்தார்.

நிகழ்ச்சிக்கு வேளாண்மை அலுவலர் கீதா முன்னிலை வகித்தார். அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுமித்ரா வரவேற்றார். வட்டார தொழில்நுட்ப வல்லுநர் முத்து ஏற்பாடுகளை செய்திருந்தார்.

பண்ணைப் பள்ளியில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

தினமலர்

**கற்குடியில் உழவர் பெருவிழா**

திருநெல்வேலி:கற்குடியில் உழவர் பெருவிழா நடந்தது.கற்குடியில் வேளாண்மைத்துறை சார்பில் நடந்த உழவர் பெருவிழாவில் செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வேளாண்மை இணை இயக்குனர் சவுந்திரராஜன் ஆதிதிராவிட விவசாய குழுவிற்கான பவர்டில்லரை வழங்கினார்.தாட்டக்கலை உதவி இயக்குனர் முருகானந்தம், கற்குடி பஞ்., தலைவர் ராணி உட்பட பலர் பேசினார்.கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் பரமசிவம், தோட்டக்கலை அலுவலர் ஜெகநாதன், வேளாண்மை அலுவலர்கள் கனகம்மாள், துணை வேளாண்மை அலுவலர் ஷேக் மைதீன், உதவி பொறியாளர் கருப்பசாமி திட்ட விளக்க உரையாற்றினர்.விழாவில் கால்நடை உதவி டாக்டர் சிவகுமார் கால்நடைகளுக்கு தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்க சிகச்சை அளித்தார்.

வேளாண் துறை சார்பில் மண் மாதிரி சேகரிப்பு, பார்த்தீனியம் ஒழிப்பு, எலி ஒழிப்பு, விதை நேர்த்தி செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.நிகழ்ச்சியில் முன்னோடி விவசாயிகள் புதியான்பாண்டியன், சங்கரலிங்கம் உட்பட திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.வேளாண்மை அலுவலர் நபீஷா நன்றி கூறினார்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சிக்கந்தர் அமீன், கருப்பசாமி, சம்சுதீன், முருகன், உத்தமன், கோமதி நாயகம், உதவி விதை அலுவலர்கள் பரமசிவம், பாலசுப்பிரமணியன் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் சக்திவேல், சிவகுமார், குமார் செய்திருந்தனர்.

**ரூ.529 கோடி வறட்சி நிதி: சத்தமின்றி வங்கி கணக்கில் சேர்த்தது அரசு**

சென்னை: வறட்சியால் பாதிக்கப்பட்ட தஞ்சை, திருச்சி உள்ளிட்ட, எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த, 3.52 லட்சம் விவசாயிகளுக்கு, 529 கோடி ரூபாய் வறட்சி நிவாரணத்தை, நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் அரசு செலுத்தியுள்ளது.தமிழகத்தில் பருவ மழைகள் பொய்த்ததாலும், கர்நாடகத்தில் இருந்து விவசாயத்திற்காக காவிரியில் நீர் விடாததாலும், காவிரி டெல்டா மாவட்டங்கள் மட்டுமின்றி, மாநிலம் முழுவதும் விவசாயம் பாதித்தது. பாதிப்பு குறித்து,

உயர்மட்டக்குழு, மாநிலம் முழுவதும் சுற்றி வந்து, அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தது.இதையடுத்து, சென்னை தவிர, 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அரசு அறிவித்தது. மத்திய அரசு, 19,665 கோடி ரூபாய் இழப்பீடு தர வேண்டும் என, மாநில அரசு வலியுறுத்திஉள்ளது. மத்திய குழு வந்து பார்வையிட்டுச் சென்றுள்ள நிலையில், மத்திய அரசின் நிவாரணம் விரைவில் கிடைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இந்நிலையில், தஞ்சை, திருச்சி உள்ளிட்ட, எட்டு மாவட்டங்களில், வறட்சி நிவாரண தொகையை, அரசு, சத்தமின்றி வழங்கியுள்ளது. ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாயும், சேவை கட்டணமாக, 15 ரூபாயும் சேர்த்து, 3.52 லட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில், 529 கோடி ரூபாய் நிவாரணத்தொகை சேர்க்கப் பட்டுள்ளது.எட்டு மாவட்டங்களுக்கும் நிவாரண தொகையாக, 541.50 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. மீதமுள்ள நிதி குறித்து வருவாய்த் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "மீதமுள்ள நிதியில், குறிப்பிட்ட மாவட்டங்களில், குடிநீர் மேம்பாடு, கால்நடைகளுக்கு தீவனம் வழங்கல், விவசாயிகள் வேலை வாய்ப்பு போன்ற பணிகளைச் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது' என்றார்.

**மாட்டு சந்தை அமோகம் ; ரூ.50 லட்சத்துக்கு வர்த்தகம்**

பொள்ளாச்சி : மாட்டு சந்தையில், ரூ.50 லட்சம் மதிப்புக்கு வர்த்தகம் நடந்துள்ளது. பொள்ளாச்சியில் நேற்று மாட்டுச் சந்தை கூடியது. தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா உட்பட மாநிலங்களில் இருந்து, வளர்ப்பு, இறைச்சி பயன்பாட்டுக்கான கால்நடைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. அனைத்து வகையான கால்நடைகள் விற்பனையாயின. தமிழக, மாட்டு வியாபாரிகள் சங்க பொருளாளர், செல்வராஜ் கூறுகையில், ""சில மாதங்களாக மந்த நிலையில் இருந்த மாட்டுச்சந்தை, தற்போது சூடுபிடித்துள்ளது. இன்னும் இரு வாரங்களுக்கு இதே நிலை நீடிக்கும். சந்தையில், 50 லட்சம் ரூபாய் வரை, வர்த்தகம் நடந்துள்ளது. பள்ளி திறந்தால், இறைச்சி தேவை குறைய வாய்ப்புள்ளது. எனவே, விற்பனை சரியும்," என்றார்.

**தமிழக நெல் திருவிழா ; விவசாயிகளுக்கு அழைப்பு**

திருவாரூர்: தமிழக அளவிலான, நெல் திருவிழா, திருத்துறைப்பூண்டியில் நடக்கிறது. திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, அதிரங்கம், இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், நெல் திருவிழா வரும், 25, 26 ம் தேதிகளில் நடக்கிறது. விழாவில், பாரம்பரிய நெல், இயற்கை வேளாண் முறையிலான தொழில்நுட்பம், உணவு பாதுகாப்பு, இடு பொருட்கள் தாயாரிப்பு, திருந்திய நெல்சாகுபடி முறை, ஒருங்கிணைந்த பண்ணையம், நீர் ஆதாத ரபாதுகாப்பு,

இயற்கை வேளாண் விளைபொருள் விற்பனை உள்ளிட்டவை குறித்து, கருத்தரங்குகள் நடக்கின்றன. பாரம்பரிய நெல் குறித்த புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன.

தமிழகம், கர்நாடகா, கேரளா மற்றும் மேற்கு வங்கத்தை சேர்ந்த, முன்னணி விவசாயிகள் பங்கேற்கின்றனர். விழாவில், 60 நாள் முதல், 180 நாட்கள் வயதுடைய, பராம்பரிய நெல் விதைகள், அதிலும் வறட்சி, வெள்ளம், புயல் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களை தாங்கி வளரும் விதைநெல், வழங்கப்பட உள்ளது. பங்கேற்கும் விவசாயிகளுக்கு, தங்கும் வசதி மற்றும் ஐந்து வேளை உணவு, இலவசமாக வழங்கப்படுகின்றன. விபரங்களுக்கு, 98426-07609, 94433-20954 மற்றும் 04369-220954 என்ற தொலை பேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு சோலார் பம்பு செட்**

சென்னை : தமிழக அரசின் எரிசக்தித்துறை கொள்கை விளக்க குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:மின் சிக்கனத்திற்காக, சூரிய ஒளியில் (சோலார்) இயங்கும், 500 பம்பு செட்களை கொள்முதல் செய்து, விவாயிகளுக்கு வழங்க, அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மொத்த விலையில், 50 சதவீதத்தை தேசிய வேளாண் மேம்பட்டுத் திட்டமும், 30 சதவீதத்தை மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஏற்கும். மீதமுள்ள, 20 சதவீதத்தை விவசாயிகள் கடனாகாவோ, நேரடியாகவோ செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.இத்திட்டத்திற்கு வேளாண் துறை மூலம் விவசாயிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

**எள்ளில் போட்ட பணம் எண்ணெய் ஆகுமா? கோடை வறட்சியால் விவசாயிகள் கலக்கம்**

சி.ஜி.எஸ்.கண்டிகை : கோடை வெயில் கடுமையாக கொளுத்தி வருவதால், எள் பயிர் செய்த விவசாயிகள், கலக்கத்தில் உள்ளனர். அடுத்த, 30 நாட்களுக்கு, எள் செடிகள், வெயிலில் காய்ந்து விடாமல் தப்பித்தால் மட்டுமே, அறுவடை செய்ய இயலும். இல்லாவிட்டால், விதைப்பு செலவு கூட கிடைக்காது என, தெரிவித்தனர்.ஆர்.கே.பேட்டை ஒன்றியம், சி.ஜி.எஸ்.கண்டிகை ஊராட்சியைச் சேர்ந்த விவசாயிகள், எள் விதைத்துள்ளனர். மலைப் பகுதியை ஒட்டிய மானாவாரி நிலங்களில் எள் பயிரிடப்பட்டு உள்ளது. கோடையில் நெல், கரும்பு, வாழை உள்ளிட்டவற்றை பயிரிட தண்ணீர் இல்லாததால், விவசாயிகள் எள் பயிரிட்டுள்ளனர்.ஆர்.கே.பேட்டை ஒன்றியத்தில், 58 ஏக்கர் பரப்பளவில் எள் பயிரிடப்பட்டுள்ளது. எள், பாசன வயல்களில்

ஏக்கருக்கு, 500 கிலோவும், மானாவாரி வயல்களில் ஏக்கருக்கு, 200 கிலோவும் மகசூல் அளிக்கும். எள் கிலோ, 80 ரூபாய் முதல், 160 ரூபாய் வரை விற்பனையாகிறது. எள்ளில் இருந்து நல்லெண்ணெய் எடுக்கப்படுகிறது. எள் பயிரிட, அதிக செலவு ஆவது இல்லை. பூச்சி தொல்லை கிடையாது. உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட செலவுகள் இல்லாததால், மானாவாரி நிலங்களில் எள் அதிகளவில் பயிரிடப்படுகிறது.கோடைக்கு முன்பாக மார்ச் மாதம் எள் விதைக்கப்படும். ஜூன் முதல் வாரத்தில் அறுவடை துவங்கும். எள், வறட்சியை தாங்கி வளரக்கூடியது என்றாலும், தற்போதைய அக்னி நட்சத்திர வெயிலை தாக்குப் பிடிக்க முடியாமல் காய்ந்து வருகின்றன.வரும், 28ம் தேதி வரை, அக்னி நட்சத்திரம் தொடரும் என்பதால், எள் பயிரிட்டுள்ள விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். அடுத்த, 30 நாட்களுக்கு பயிரை காப்பாற்றினால் மட்டுமே, எள்ளை அறுவடை செய்ய இயலும். இல்லாவிட்டால், விதைத்த செலவு கூட கிடைக்காது என, விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.

**சூறாவளி காற்றில் வாழை மரங்கள் சேதம்:செஞ்சி பகுதி விவசாயிகள் பாதிப்பு**

செஞ்சி:செஞ்சி பகுதியில் ஏற்பட்ட சூறாவளி காற்றில் ஏராளமான வாழை மரங்கள் மண்ணில் சாய்ந்தன. புளியமரம் வேரோடு சாய்ந்ததில் வீடு சேதமடைந்தது.செஞ்சி பகுதியில் கடந்த 12ம் தேதி மாலை திடீரென கடும் சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. இந்த சூறாவளி காற்றில் ஏராளமான இடங்களில் மரங்கள் விழுந்தன. மரக்கிளைகள் விழுந்ததில் பல இடங்களில் மின்சாரம் தடை பட்டது. மின்வாரிய ஊழியர்கள் இதை சரி செய்தனர்.செஞ்சி பீ. ஏரிக்கரையில் ஜெகதீசன் என்பவரின் சிமென்ட் ஓடு கூரை, காற்றில் பறந்து கீழே விழுந்து நொறுங்கியது. இதே போல் வ.உ.சி., தெருவை சேர்ந்த பூபதி என்பவரின் வீட்டு கூரையும் காற்றில் பறந்தது. செஞ்சி பகுதியில் பல ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் காற்றில் விழுந்தன. திருவண்ணாமலை ரோட்டில் முருகன் என்பவரின் 3 ஏக்கர் வாழை தோட்டம், திண்டிவனம் சாலையில் குமார் என்பவரின் வாழை தோட்டம் ஆகியவை காற்றில் சாய்ந்தன. பி.டி.ஓ., அலுவலகத்தில் மரங்கள் முறிந்து விழுந்தன.அவலூர்பேட்டை:வளத்தி அருகே புளியமரம் வேரோடு ஓட்டு வீடு மீது சாய்ந்ததில் வீடு சேதமடைந்தது. வளத்தி அடுத்த கடலி ஊராட்சியை சேர்ந்த மாவனந்தல் கிராமத்தை சேர்ந்தவர் பாபு பாய் மகன் இமாம், 52. கூலி தொழிலாளியான இவர் ஓட்டு வீட்டில் வசித்து வருகிறார்.கடந்த 12ம்தேதி மாலை மாவனந்தலில் வீசிய புயல் காற்றினால் இமாமின் வீட்டின் அருகே இருந்த புளிய மரம் வேருடன் சாய்ந்து, அவரது வீட்டின் மீது திடீரென விழுந்தது. வீட்டிற்குள் இருந்த அவரது மனைவி ஷம்ஷாத், குழந்தைகள் முபாரக், முனவர் ஆகியோர் காயமடைந்தனர்.வீட்டின் சுவர்கள், மேல்கூரை, ஓடுகள் என வீடு முழுவதும் சேதமடைந் தது. உடனடியாக இவர்கள், உறவினர் வீட்டில் சென்று தங்கினர்.

**விக்கிரவாண்டியில் உழவர் பெருவிழா**

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி ஒன்றியத்தில் வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டது.விக்கிரவாண்டி ஒன்றியம் ஆசூர், மூங்கில்பட்டு, சின்னதச்சூர், பொன்னங்குப்பம், வாக்கூர், மதுரப்பாக்கம், பிரம்மதேசம், வெட்டுக்காடு கிராமங்களில் உழவர் பெருவிழா நடந்தது.உதவி வேளாண்மை இயக்குனர் ராமசாமி தலைமை தாங்கினார். விவசாயிகளுக்கு அரசு சார்பில் வழங்கப்படும் மான்ய திட்டங்கள் குறித்து, துறை அலுவலர்கள் ஜோதிமணி, சுப்ரமணியன், அரிகரன், பாஸ்கரன் ஆகியோர் பேசினர். ஊராட்சி தலைவர்கள் கருணாகரன், கஸ்தூரி பாண்டியன், அனிதா ராஜேந்திரன், சரசு ரத்தினசாமி, முரளி, ஜெயந்தி ஆனந்தபாஸ்கரன், துளசியம்மாள், நாகமுத்து, வங்கி தலைவர் அசோகன், பாபு கவியரசன், அய்யனார், உதவி வேளாண்மை அலுவலர்கள் இந்துமதி, ராதை ஆகியோர் கலந்து கொண்டனர் .

**விழுப்புரத்தில் 17ம் தேதிவிவசாயிகள் குறை தீர்ப்பு**

விழுப்புரம்:விழுப்புரத்தில் வரும் 17ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் நடக்கிறது.விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம், வரும் 17ம் தேதி காலை கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கலெக்டர் சம்பத் தலைமையில், நடக்கும் இக்கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க பிரிதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து தீர்வு காணலாம்.

**மீன் குஞ்சுகள் வளர்ப்பதற்குரூ.50 ஆயிரம் வரை மான்யம்**

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் பண்ணைகள் அமைத்து, மீன் குஞ்சுகள் வளர்க்க 50 ஆயிரம் ரூபாய் வரை மான்யம் வழங்கப்படுகிறது.தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2012-13ம் ஆண்டிற்கு மீன் வளத்துறையின் மூலம் மான்யம் வழங்கப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில், பண்ணை அமைத்து மீன் குஞ்சு வளர்க்கும் உரிமையாளர்கள், இத்திட்டத்தின் கீழ் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்திட வேண்டும்.
மீன் குஞ்சுகளை வளர்த்தெடுக்கும் தொகையில் 50 சதவீதம் மான்யம் வழங்கப்படும். இத்திட்டத்தில் அதிக பட்சமாக 50 ஆயிரம் ரூபாய் வரை மான்யம் வழங்கப்படும். விதைப் பண்ணையின் பரப்பளவு 5 ஏக்கர் வரை அமைத்திருக்கலாம்.இத்திட்டம் தொடர்பாக விபரங்கள் மற்றும் விண்ணப்பம் பெற, மீன்துறை உதவி இயக்குனர், மீன்துறை உதவி இயக்குனர் அலுவலகம் (உள்நாட்டு மீன் வளம்), நெ.1, விஸ்வலிங்க ஆச்சாரி லே அவுட், விழுப்புரம்,

தொலைபேசி 04146-224329 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் அலுவலக செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெடிமோழியனூரில்உழவர் பெருவிழா**

மயிலம்:மயிலம் அடுத்த நெடி மோழினூரில் உழவர் பெருவிழா நடந்தது.மயிலம் அட்மா தலைவர் கவுன்சிலர் கண்ணன் தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர் உமா கோவிந்தராஜ், கிராம நிர்வாக அலுவலர் மங்கையற்கரசி முன்னிலை வகித்தனர். மயிலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஆறுமுகம், அரசின் சார்பில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மான்ய உதவிகள் மற்றும் சலுகைகள் குறித்து பேசினார்.உதவி வேளாண்மை அலுவலர்கள் சத்யா, மகா, மங்கையற்கரசி, கால்நடை மருத்துவர் நடராஜ், தோட்ட கலைத்துறை உதவி அலுவலர் சதீஷ், பாமாயில் இளநிலை அலுவலர் இளவழகன் கலந்து கொண்டனர்.

**மழையின்றி கருகும்மரவள்ளி பயிர்கள்**

சின்னசேலம்:சின்னசேலம் பகுதிகளில் பயிரிடப்பட்ட பயிர்கள் கருகி வருவது விவசாயிகள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.சின்னசேலம் தாலுகாவில் கூகையூர், அம்மகளத்தூர், தோட்டப்பாடி, பெத்தாசமுத்திரம் உள்ளிட்ட 85 கிராமங்கள் உள்ளன. அனைத்து கிராம மக்களும் விவசாயத்தை முக்கிய தொழிலாக செய்து வருகின்றனர். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து போனதால் கிணற்று நீரை பயன்படுத்தி கரும்பு, மரவள்ளி, சோளம் உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்து வந்தனர். மழை இல்லாமல் நிலத்தடி நீர் குறைந்ததால் கிணற்றில் தண்ணீர் வற்றத் துவங்கியது. விவசாயம் செய்த பயிர்கள் முழுவதும் கா#கின்றன. அன்றாட தேவைகளுக்கும், கால்நடைகளுக்கும் தேவையான குடிநீரை நீண்ட தூரம் சென்று கொண்டு வருகின்றனர். கால்நடைகளுக்கு தீவனமின்றி குறைந்த விலைக்கு விற்கின்றனர். தண்ணீரின்றி மரவள்ளி பயிர்கள் காய்ந்து வருவது விவசாயிகள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

**தேவியானந்தல் உழவர் பெருவிழா**

உளுந்தூர்பேட்டை:திருநாவலூர் ஒன்றியம் தேவியானந்தல் கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் தேவநாதன் தலைமை தாங்கினார். குமரகுரு எம்.எல்.ஏ., கலந்து கொண்டு நீரில் கரையும் உரங்களையும், கலைக்கொள்ளி மருந்து, நுண்ணுரங்களையும் விவசாயிகளுக்கு வழங்கினார். அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் செண்பகவேல், ஒன்றிய கவுன்சிலர் வரதமலை, ஆத்தூர் ஊராட்சி தலைவர் முத்து லட்சுமிதயாநிதி, வேளாண் அலுவலர் அர்வின்ராஜ், துணை வேளாண் அலுவலர் நெடுஞ்செழியன், உதவி வேளாண் அலுவலர்கள்

சிவக்குமார், ராஜ்குமார், பழனிவேல், ஜோதிராமலிங்கம், குணசேகரன், ஆத்மா திட்ட அலுவலர்கள் கவிதா, சிவப்பெருமாள், நாராயணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சேலத்தில் கடும் வறட்சியால் காய்கறி விலை எகிறியது**

சேலம்: சேலத்தில் காய்கறிகளின் விலை உச்சத்தை தொட்டுள்ளது. ஒரு கிலோ பீன்ஸ், 98 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.தமிழகத்தில் பருவமழை பொய்த்து விட்டதால், அரிசி விலை உச்சத்தில் சென்று கொண்டிருக்கிறது. தற்போது கீரை உட்பட அனைத்து காய்கறிகளின் விலையும் உச்சத்துக்கு சென்று விட்டது. இதனால், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பழ வகைகளில் திராட்சை, முலாம்பழங்களை தவிர மற்ற பழங்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது.

பருவ மழை பொய்த்தது மட்டுமின்றி, விவசாயத்துக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டதால், காய்கறிகளின் விலை உயர்வுக்கு காரணமாக மாறி விட்டது. சில்லரை கடைகளில் குறைந்தபட்ச விலையாக சேனைக்கிழங்கு ஒரு கிலோ, 20 ரூபாய்க்கு விற்பனையாகிறது. மற்ற காய்களின் விலை விபரம்:(கிலோ).பீன்ஸ் ஒரு கிலோ, 92 ரூபாய், தக்காளி, 43, சின்ன வெங்காயம், 60, பெரிய வெங்காயம், 20, முருங்கைக்காய், 38, சிகப்பு முள்ளங்கி, 30, பீட்ரூட், 36, கேரட், 59, கத்தரிக்காய், 34, உருளைக்கிழங்கு, 44, வெண்டைக்காய், 40, பாகற்காய், 36, பீர்க்கங்காய், 40, முட்டைகோஸ், 30, வெள்ளை பூசணிக்காய், 20, சேனைக்கிழங்கு, 20, கொத்தவரங்காய், 30 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது.மொத்த விற்பனையில் வாங்கும் போது ஒரு கிலோவுக்கு, ஐந்து ரூபாய் வரை விலை குறைய வாய்ப்பு உள்ளது. ஒரு கட்டு கீரை, ஆறு ரூபாய்க்கு விற்பனையாகிறது.

**வறட்சியின் கோர தாண்டவத்தால் சங்ககிரியில் கருகும் மா, தென்னை**

சங்ககிரி: சேலம் மாவட்டத்தில் வறட்சியின் கோர தாண்டவம் அதிகரித்துள்ள நிலையில், சங்ககிரி பகுதியில், மா, தென்னை மரங்கள் கருகி வருவது, விவசாயிகள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்ட நிலையில், காவிரி உள்ளிட்ட அனைத்து ஆறுகளும் வறண்டு விட்டன. அதே நேரத்தில் வெயிலின் தாக்கமும் அதிகரித்துள்ளதால், நிலத்தடி நீரும் சுருண்டு விட்டது. இதனால், ஆங்காங்கே போடப்பட்ட ஆழ்துளை கிணறுகள், திறந்த வெளி கிணறுகளும் நீர் இன்றி காணப்படுகிறது.இதில், சங்ககிரி பகுதியில் மானாவரி நிலத்தில் பயிரிடப்பட்ட வாழை, மஞ்சள், குச்சிக் கிழங்கு உள்ளிட்ட

பயிர்கள், கடந்த மார்ச் மாதமே கருகி விட்டன. இந்த பயிர்களின் கருகல் காரணமாக விவசாயிகள் கடும் இழப்பை சந்தித்ததால், அவர்கள் மத்தியில் கலக்கம் ஏற்பட்டது.இந்நிலையில், அக்னி நட்சத்திர வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் நிலையில், மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் இருந்து வந்தது. ஆனால், அக்னி நட்சத்திரம் துவங்கி, பத்து நாட்களுக்கு மேல் ஆகி விட்ட நிலையில், சொல்லிக் கொள்ளும் படி மழை பெய்ய வில்லை.அதே நேரத்தில் வெயிலின் கோர தாண்டவம், 105 டிகிரியை தாண்டி கொளுத்துகிறது. கிணறுகளில் குட்டை போல் காட்சி அளித்த குறைந்த அளவிலான தண்ணீரும் வற்றி விட்டது. மேலும், புதிதாக ஆழ்துளை கிணறுகளை ஏற்படுத்த முயன்ற விவசாயிகள், நிலத்தில், 500 அடி வரை, துளை அமைத்தால் மட்டுமே தண்ணீர் கிடைப்பதால் மிகுந்த ஏமாற்றம் அடைந்து வருகின்றனர்.இதன் காரணமாக, சங்ககிரியில் மானாவரி பகுதிகளில் பயிரிடப்பட்டு இருந்த மா, தென்னை மரங்கள் கருகி விட்டன. குறைந்த அளவில் மாமரங்களில் காய்த்த மாங்காய்களும் தண்ணீர் இல்லாததால், சுருங்கி விளைச்சல் குறைந்து, சுவையும் மாறி விட்டது. நடப்பாண்டில் விவசாயிகள் கடுமையான இழப்பை சந்தித்து உள்ளனர்.சங்ககிரியில் மட்டுமின்றி கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, காக்காபாளையம், ராக்கிப்பட்டி மற்றும் குக்கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் நடப்பட்டு இருந்த மா, தென்னை மரங்கள் மழை இன்றி கருகியது, விவசாயிகள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. அதே நேரத்தில் இந்த பயிர்களை காப்பாற்ற ஆழ்துளை அமைக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

**நாமகிரிப்பேட்டையில் ரூ.25 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 25 லட்சம் ரூபாய், மதிப்பில் மஞ்சள் ஏலம் நடந்தது.நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் செவ்வாய் கிழமை மஞ்சள் ஏலம் நடக்கும். ஏலத்தில், 18 தனியார் மஞ்சள் மண்டி உட்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள விவசாயிகள், மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.அதில், 65 கிலோ எடை கொண்ட விரலி ரகம் அதிகபட்சமாக, 8,419 ரூபாயக்கும், குறைந்தபட்சமாக, 6,420 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது. அதே போல், உருண்டை ரகம் அதிகபட்சமாக, 6,919 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 5,200 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது.பனங்காலி அதிகபட்சமாக மூட்டை, 16 ஆயிரம் ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 9,009 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதன்படி, நேற்று ஒரே நாளில், 25 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது என, கூட்டுறவு சங்க மேலாளர் சேகர் தெரிவித்தார்.

**சூளகிரியில் வேளாண் பொருட்கள் குறித்த கருத்தரங்கு**

ஓசூர்: சூளகிரி வட்டாரம், இம்மிடிநாயக்கன்ப்பள்ளியில், பராம்பரியமிக்க வேளாண் பொருட்களின் மகத்துவம் மற்றும் பயன்பாடு குறித்த கருத்தரங்கம் நடந்தது. பஞ்சாயத்து தலைவர் புஷ்பா முன்னிலை வகித்தார். இளநீர், சீக்காய் மற்றும் பருத்தி பொருட்களின் மகத்துவம், அவற்றின் பயன்பாடு குறித்து கருத்தரங்கில் வேளாண் அதிகாரிகள், விவசாயிகளுக்கு விளக்கி கூறினர்.வேளாண் உதவி இயக்குனர், சுப்பைய்யா தலைமை வகித்தார். பார்த்தீனியம் களை கட்டுப்பாடு, மண் மாதிரி எடுத்தல், தேங்காய் மட்டை உறிக்கும் இயந்திரம், ஆடு, மாடுகளுக்கு குடல் புழு நீக்கம், தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட செயல் விளக்கங்களை வேளாண் உதவி அலுவலர்கள் தமிழ்வேந்தன், பாலசுப்பிரமணியன், தேவராஜ், திருமுருகன் ஆகியோர் எடுத்து கூறினர். தோட்டக்கலை உதவி இயக்குனர் முருகேசன், பட்டு வளர்ச்சி உதவி இயக்குனர் ரமணகீதா, வேளாண் அலுவலர் சம்பத், துணை வேளாண் அலுவலர் ரவிகிஷோர், உதவி விதை அலுவுலர் ரவி, உதவி பொறியாளர் பெருமாள் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.ஏற்பாடுகளை அட்மா தொழில் நுட்ப மேலாளர் பார்த்திபன், தொழில் நுட்ப வல்லுனர்கள் தென்றல், கவுதம் ஆகியோர் செய்திருந்தனர்.

**விலை சரிவால் தேயிலை விவசாயிகள் கவலை**

குன்னூர் : குன்னூர் ஏலத்தில் தொடரும் விலை சரிவால், தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், நடப்பாண்டின் 19வது ஏலம் நடந்தது. மொத்தம் 15.40 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில், 11.19 லட்சம் கிலோ இலை ரகமும், 4.21 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும். மொத்தம் 15.40 லட்சம் கிலோ தேயிலை தூளில் 82 சதவீதம் விற்பனையானது. இந்த வாரமும் விலையில் சரிவு காணப்பட்டது. கிலோ ஒன்றுக்கு 4 ரூபாய் விலை குறைந்தது. சி.டி.சி., ரகத்துக்கு அதிகபட்சமாக 173 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக 250 ரூபாயும் விலை கிடைத்தது. சராசரியாக சாதாரண இலை ரகத்துக்கு 80 ரூபாயிலிருந்து, 82 ரூபாய் வரையிலும், உயர் ரகம் கிலோ ஒன்றுக்கு 115 ரூபாய் முதல், 150 ரூபாய் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 80 ரூபாயிலிருந்து, 83 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 130 ரூபாய் முதல், 160 ரூபாய் வரை விலை கிடைத்தது. வரும் 16 மற்றும் 17ம் தேதிகளில் நடக்கும் 20வது ஏலத்துக்கு மொத்தம் 14.84 லட்சம் கிலோ விற்பனைக்கு தயாராக உள்ளது.

தொடரும் விலை சரிவு: தேயிலை ஏலத்தில் கடந்த பல வாரங்களாக தொடர்ந்து விலை சரிவு

ஏற்பட்டு வருகிறது. சராசரியாக ஒரு கிலோவுக்கு 93.50 ரூபாய் விலை கிடைத்தது. இதுவே இதுவரை நடந்த ஏலத்தில், குறைந்தபட்ச விலையாகும். கடந்த மார்ச் மாதம் வரை கிலோ ஒன்றுக்கு சராசரியாக 100 ரூபாய் கடந்த நிலையில், மார்ச் இறுதியிலிருந்து தேயிலை தூளின் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது.

இதன் காரணமாக பசுந்தேயிலைக்கு வழங்கப்படும் வாராந்திர விலையும் ஒரு ரூபாய் குறைந்துள்ளது. இதனால், சாதாரண பசுந்தேயிலைக்கு 15 முதல் 17 ரூபாயும், நடுத்தர ரகத்துக்கு 18-20 ரூபாயும், உயர் ரகத்துக்கு 20 முதல் 23 வரை விலை கிடைக்கிறது. தேயிலைக்கு தொடர்ந்து விலை சரிவு ஏற்பட்டு வருவதால் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**இயற்கை உரத்தில் விளையும் கஸ்தூரி மஞ்சள்**

பந்தலூர் : பந்தலூரில் இயற்கை உரங்களை பயன்படுத்தி கஸ்தூரி மஞ்சள் அதிகளவில் விளைவிக்கப்பட்டு வருகிறது; "இதனை மேம்படுத்த தோட்டக்கலை துறையினர் முன்வரவேண்டும்' என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

கூடலூர், பந்தலூர் பகுதிகளில் நிலவும் சீரோஷ்ண நிலையில், தேயிலை, காபி உட்பட சமவெளி பகுதிகளில் விளையும் நெல், கோதுமை உட்பட பல்வேறு வகையாக விவசாய விளைபொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில், மருத்துவ குணம் அதிகம் உள்ள கஸ்தூரி மஞ்சள் விவசாயத்தில் பல விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதில், பந்தலூர் அருகே அய்யன்கொல்லியை சேர்ந்த இந்திராணி என்பவர், முற்றிலும் சாம்பல், தாவர தழைகளை மட்டுமே உரமாக போட்டு கஸ்தூரி மஞ்சள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார். தற்போது, இவர் தோட்டத்தில் விளைந்த கோதாவரி வகை மஞ்சள். இயற்கை விவசாயத்தில் விளைவித்த கஸ்தூரி மஞ்சள் ஆகியவைக்கு, 500 ரூபாய் வரை கிலோவுக்கு கிடைக்கிறது. இதன் பூக்கள் ஒரு மாதம் வரை வாடாமல் இருக்கும்.

"இதற்கு மருத்துவ நிறுவனங் களில் அதிக கிராக்கி உள்ளதால், கஸ்தூரி மஞ்சள் விவசாயத்தை மேம்படுத்த தோட்டக்கலை துறையினர் முன்வர வேண்டும்' என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**ஆதிரெங்கத்தில் மே 25, 26ல் மாநில அளவிலான நெல் திருவிழா, கருத்தரங்கம்**

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே, மாநில அளவில் நெல் திருவிழா வரும் 25,26ம் தேதிகளில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமையில் நடக்கிறது. இதில்,

பல்வேறு மாநிலங்களை சேர்ந்த விவசாயிகள், நிபுணர்கள் பங்கேற்கின்றனர்.திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் மாநில அளவில், நெல் திருவிழா இரண்டு நாட்கள் நடக்கிறது. 25ம் தேதி முதல் நாளில் துவக்க விழாவில் வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமை வகிக்கிறார். நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் ரவிசங்கர் முன்னிலை வகிக்கிறார்.இதுகுறித்து, "நமது நெல்லை காப்போம்' மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் கூறியதாவது:நெல் திருவிழாவில், பாரம்பரிய நெல், இயற்கை வேளாண் முறையிலான தொழில்நுட்பம், உணவு பாதுகாப்பு, இடுபொருள் தயாரிப்பு, திருந்திய நெல் சாகுபடி முறை, ஒருங்கிணைந்த பண்ணையம், நீர் ஆதார பாதுகாப்பு, இயற்கை வேளாண் விளைபொருள் விற்பனை போன்ற தலைப்புகளில், தனித்தனி அரங்குகளில் கருத்தரங்கம் 25, 26ம் தேதிகளில் நடக்கிறது.இதில், பாரம்பரிய நெல் சாகுபடி குறித்த எளிய தொழில்நுட்பங்களை முன்னோடி விவசாயிகள் விளக்குகின்றனர். தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி பங்கேற்கிறார். தமிழக அரசின் வேளாண் துறை இயக்குனர் ராஜேந்திரன், பாரம்பரிய நெல் குறித்த நூலை வெளியிடுகிறார். திருவாரூர் கலெக்டர் நடராஜன், விவசாயிகளுக்கு பாரம்பரிய விதை நெல்களை வழங்குகிறார்.விழாவில், தமிழகம், கர்நாடகா, கேரளா, மேற்கு வங்காளம், ஒடிஷா மாநிலங்களை செய்த முன்னணி விவசாய அமைப்பு பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். 60 நாள் முதல் 150 நாள் வயதுடைய பாரம்பரிய நெல் விதைகள், வறட்சி, வெள்ளம், புயல் உள்பட இயற்கை சீற்றங்களை தாங்கி வளரும் விதை நெல்கள், விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படும். இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

**உழவர் பாதுகாப்பு திட்ட பயனாளிக்கு உதவித்தொகை**

வேதாரண்யம்: வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த வண்டுவாஞ்சேரி, துளசியாபட்டணம், தாணிக்கோட்டகம் பகுதியை சேர்ந்த 150 பேருக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தில் ஒரு லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் உதவித்தொகை அளிக்க உத்தரவு வழங்கும் நிகழ்ச்சி வேதை தாலுக்கா அலுவலகத்தில் நடந்தது. இதில், தாசில்தார் ராம்குமார் தலைமை வகித்தார். நலிந்தோர் நலத்திட்ட தாசில்தார் விஜயா முன்னிலை வகித்தார். இதில், எம்.எல்.ஏ., காமராஜ் கலந்துகொண்டு, விதவை மற்றும் முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான அரசின் உத்தரவை, 150 பேருக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகர கூட்டுறவு கடன் சங்கத்தலைவர் வீரமணி, அ.தி.மு.க., மாவட்ட பிரதிநிதி வீரராசு, பஞ்., தலைவர்கள் வேதையன், குஞ்சாலி மரைக்காயர் உள்பட பலர் பங்கேற்றனர்.

**ஒட்டன்சத்திரத்தில் தக்காளிகிலோ ரூ. 40க்கு விற்பனை**

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரத்தில் தக்காளி கிலோ ரூபாய் 40-க்கு விற்றது.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் தக்காளி, கொத்தவரை, அவரை உள்ளிட்ட காய்கள் அதிகமாக விளைவிப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். தொடர்ச்சியாக மழையின்மை காரணமாக காய்கள் பயிரிடப்பட்ட பரப்பு வெகுவாக குறைந்து விட்டது. நீர்நிலைகளில் நீர்மட்டம் மிகவும் குறைந்துவிட்டது. பல இடங்களில் நட்ட பயிர்களை காப்பாற்ற முடியவில்லை. இருந்த சொற்ப நீரைக் கொண்டு சில விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்து வருகின்றனர். இருந்த போதிலும் மார்க்கெட்டில் தக்காளி வரத்து நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.கடந்த 10 நாட்களுக்கு முன் தக்காளி பெட்டி ரூபாய் 320-க்கு விற்றது. பின்னர் ரூபாய் 300-க்கும் கீழ் குறைந்து விற்றது. நேற்று 14 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ரூபாய் 400க்கு விற்றது. கடந்த மாதம் தக்காளி பெட்டி 160 ரூபாய்க்கு விற்றது.வியாபாரி சண்முகம் கூறுகையில், "" வறட்சி காரணமாக தக்காளி வரத்து வெகுவாக குறைந்துவிட்டதால், இந்த ஆண்டு விலை ஏறுமுகமாக உள்ளது, இதன் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது,'' என்றார்.வெளிமார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.40க்கும் அதிகமாக விற்றது.

**"கார்பைட்' மாம்பழ விற்பனை அமோகம்:அதிகாரிகள் கொர்**

பரமக்குடி:பரமக்குடியில் "கார்பைட்' எனப்படும் ரசாயனக்கல் மூலம் பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. தற்போது மாம்பழ சீசன் சூடு பிடித்துள்ள நிலையில், பல்வேறு ஊர்களில் இருந்து மொத்த விற்பனையாளர்கள், மாங்காய்களை குறைந்த விலைக்கு டன் கணக்கில் வாங்கி வருகின்றனர். இவர்கள் தங்களது வீடு மற்றும் குடோனில் காற்றுப் புகாத அறையில் கொட்டி வைக்கின்றனர். பின்னர் மாங்காய்கள் பழுக்க வைக்க 'கார்பைட்' என்ற ரசாயனக் கல் பொட்டலங்களை வைக்கின்றனர். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு பின் மூடப்பட்டிருக்கும் அறைகளை திறந்து மாம்பழங்கள் விற்பனைக்கு வருகிறது. இந்த குடோன்களுக்கு அருகில் உள்ளவர்களுக்கு "கார்பைட்' மூலம் வரும் துர்நாற்றம், தூசிகளால் ஆஸ்துமா, புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் உருவாகும் அச்சம் உள்ளது. மேலும் இரவு நேரங்களில் தூக்கம் இழந்து தவிக்கின்றனர். விற்பனைக்கு வரும் இது போன்ற பழங்கள் குறைந்பட்சம் ஒரு பழம் 5ரூபாய் அளவில் வாங்கப்பட்டிருந்தால், மார்க்கெட்டில் 20ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுபோன்ற பழங்களை உண்பதால் வயிற்று போக்கு உள்ளிட்ட உடல்உபாதைகள் ஏற்படும். உணவுத் துறை அதிகாரிகள் கார்பைட் கொண்டு பழுக்க வைக்கப்படும் மாம்பழ வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நெல் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை ரூ.117 லட்சத்தில் "ஸ்பெஷல்' திட்டம்**

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் நெல் உற்பத்தியை அதிகரிக்க 117 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் நெல் இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.இதுகுறித்து கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்ததாவது:தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல் விதைகளுக்கு கிலோவுக்கு 5 ரூபாய் மானியம் வழங்கப்படும். தற்போது கார் பருவத்திற்கு தேவையான தரமான சான்று பெற்ற நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே, தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி தேவையான விதைகளை பெற்று பயன் பெறலாம். நெல் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் குறைந்த நீரை பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்கும் வகையில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. திருந்திய நெல் சாகுபடியில் பல்வேறு தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும்.இந்த தொழில் நுட்பங்களை பயன்படுத்தி திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எக்டேர் ஒன்றிற்கு ஆயிரத்து 500 ரூபாய்க்கான இடு பொருட்கள் மற்றும் நடவு கூலி ஆயிரத்து 500 ரூபாய் உட்பட மொத்தம் 3 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் நெல் நேரடி விதைப்பு செய்யும் இடங்களில் வயலை உழவு செய்வதற்கு அரசு மானியம் வழங்குகிறது. நெல் வயலில் ஒரு முறை உழவு செய்ய 50 சதவீத மானியமாக ஒரு எக்டேருக்கு அதிகபட்சமாக 600 ரூபாய் வரை அரசு வழங்குகிறணது.தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நேரடி நெல் விதைப்பு செய்யும் வயல்களில் களைகள் அதிகம் வளர வாய்ப்புள்ளது. இந்த வயல்களில் களைகளை கட்டுப்படுத்த களை முளைக்கும் முன் பயன்படுத்த கூடிய களைக் கொல்லியை அரசு மானியத்தில் வழங்குகிறத. இக்களைக்கொல்லி 50 சதவீத மானியமாக எக்டேருக்கு அதிகபட்சமாக 750 ரூபாய் அரசு மானியம் அளிக்கிறணது.எனவே, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனரை அணுகி பயன் பெறலாம்.இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

**சிங்கநேரியில் உழவர் பெருவிழா**

திருநெல்வேலி:சிங்கநேரியில் உழவர் பெரு விழா நடந்தது.இதில் விவசாயிகளுக்கு நெல் விதை நேர்த்தி, பவர் டில்லர் செய்முறைண மூலம் செய்து காண்பிக்கப்பட்டது. மண் வள அட்டையின் முக்கியத்துவம் குறித்து தெரிவிக்கப்பட்டது. இதில் சிங்கநேரி பஞ்., தலைவர் ராஜேந்திரன், துணை தலைவர் சண்முக சுந்தரம், கூட்டுறவு சங்க தலைவர் சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.வேளாண்மை தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண்மை இன்ஜினியரிங் துறை கண்காணிப்பு இன்ஜினியர் ராமசாமி, உதவி செயற்பொறியாளர் வெள்ளையன், உதவி இன்ஜினியர் சங்கர், நான்குநேரி உதவி வேளாண்மை உதவி இயக்குனர் முருகேஷ்,

தோட்டக்கலை உதவி இயக்குனர் ஆசீர் கனகராஜன், வேளாண்மை அலுவலர் அலாய்ஸ் ராஜன், அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரதீப், அட்மா தொழில் நுட்ப அறிஞர்கள் வானமாமலை, ஊய்க்காட்டதாஸ் பேசினர்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலகிருஷ்ணன், சாந்தி, இளங்கோவன், நாகராஜ், ராஜகோபால் செய்திருந்தனர்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குபாங்குகள் மூலம் நிவாரணம் வழங்கும் பணி துவங்கியது**

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பணி துவங்கியுள்ளது. முதல் கட்டமாக தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் தாலுகா பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நிவாரண தொகை அவர்கள் பாங்க் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.தூத்துக்குடி மாவட் டத்தில் எந்த ஆண்டும் இல்லாத வகையில் கடுமையான வறட்சி ஏற்பட்டது. வறட்சியால் மானாவாரி பயிர்கள் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் தண்ணீர் இல்லாமல் நாசமாகியது.
இதனால் விவசாயிகளுக்கு நூற்று க்கணக்கான கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சி நிலையை மத்திய, மாநில அரசு உயர்மட்டக்குழுவினர் வந்து ஆய்வு செய்தனர். அந்த ஆய்வில் இம் மாவட்டம் வறட்சியால் கடுமையான பாதிப்பை சந்தித்திருப்பதாக அறிக்கை தாக்கல் செய்யப் பட்டிருப்பதாக கூறப் படுகிறது.
இந் நிலையில் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக 103 கோடி ரூபாய் தமிழக அரசு அனுமதித்து விவசாயிகளுக்கு வழங்கும் பணி துவங்கியுள்ளது. இது குறித்து தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ஆஷீஷ்குமார் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது; தூத்துக்குடி மாவட்ட த்தில் வறட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட வறட்சி நிவாரண தொகை முதல் கட்டமாக ஸ்ரீவைகுண்டம் மற்றும் தூத்துக்குடி தாலுகா பகுதி விவசாயிகளுக்கு கடந்த 13ம் தேதி முதல் அவர்களது பாங்க் கணக்கு மூலம் வழங்கப்பட்டு வருகிறது. நிவாரண தொகை பெறவுள்ள விவசாயிகளின் பெயர் பட்டியல் தாலுகா அலுவலகம், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட பாங்குகளில் மக் களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. கோவில்பட்டி, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், எட்டயபுரம் தாலுகா பகுதியில் பயிர் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு விரைவில் நிவாரண தொகை அவர்களது பாங்க் கணக்கு மூலம் வழங் கப்பட உள்ளது. இவ்வாறு கலெக்டர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டும்**

எட்டயபுரம்:விவசாயிகளின் அனைத்து கடன்களையும் ரத்து செய்ய வேண்டுமென எட்டயபுரம் விவசாயிகள் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
எட்டயபுரத்தில் விவசாயிகள் சங்க தாலுகா மாநாடு நடந்தது. சங்க தாலுகா தலைவர் ரெங்கசாமி

தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் நல்லையா மாநாட்டு கொடி ஏற்றி வைத்தார். மாநில துணை தலைவர் பெரும்படையார் மாநாட்டை துவக்கி வைத்தார். முன்னாள் எம்எல்ஏ.,க்கள் அய்யலுசாமி, ராஜேந்திரன், சங்க மாநிலகுழு உறுப்பினர் லெனின்குமார், கடலையூர் பால்பண்ணை தலைவர் பாலமுருகன், தாலுகா செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். புதிய நிர்வாகிகளாக விவசாயிகள் சங்க தாலுகா தலைவர் ரெங்கசாமி, இணைதலைவர்கள் ஜெயராம், திருவடிசாமி, செயலாளராக கிருஷ்ணமூர்த்தி, இணை செயலாளர்கள் ராமகிருஷ்ணன், குருசாமி, பொருளாளராக ராஜபாண்டியும் மாநாட்டில் 29பேர் கொண்ட தாலுகா குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் அனைத்து விவசாய கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். 60 வயது நிரம்பிய அனைத்து விவசாயிகளுக்கும் ஓய்வூதியம் மாதம் ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும். வறட்சி நிவாரண பணிகளை உடனே துவக்க வேண்டும், எட்டயபுரத்தில் விவசாயிகளின் விளைபொருட்களை பாதுகாக்கும் வகையில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இணைதலைவர் ஜெயராம் நன்றி கூறினார்.

## விவசாய மலர்

**நர்சரியில் கரும்பு நாற்று பயிர்; மாதம் ரூ.25 ஆயிரம் வருமானம் - சாதிக்கிறார் ராமநாதபுரம் முன்னோடி விவசாயி**



ராமநாதபுரம் மாவட்டம் நயினார்கோவில் ஒன்றியம் அக்கிரமேசி கிராமத்தை சேர்ந்த பி. ராமநாதன். நர்சரி மூலம் ஆலைக் கரும்பு நாற்று உற்பத்தி செய்து, அதன் மூலம் மாதந்தோறும் 25 ஆயிரம் ரூபாய் சத்தமில்லாமல் சம்பாதித்து வருகிறார். இதன் மூலம், மாவட்டத்தில் முன்னோடி விவசாயியாக திகழ்கிறார்.

ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள், பருவமழையை நம்பி உள்ளனர். பருவ மழை கைவிரிப்பால்,

விவசாயிகள் நஷ்டமடைவதும் உண்டு. இந்நிலையில், வறட்சியை தாங்கி விளையக்கூடிய புதிய பயிர் ரகங்களை சாகுபடி செய்வதற்காக, வேளாண் அபிவிருத்தி திட்டமான "அட்மா' திட்டம், நயினார்கோவில், போகலூர் உள்ளிட்ட பல ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **கரும்பு சாகுபடி:** வெட்டிய கணுவுடன் கூடிய கரும்பை, நிலத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அதிக செலவு ஏற்படுகிறது. இதை தவிர்க்கும் பொருட்டு, நர்சரி மூலம் கரும்பு நாற்று உற்பத்தி செய்யும் புதிய தொழில்நுட்பம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. கரும்புடன் கணு (பரு) பகுதியை மட்டும் தனியாக வெட்டி எடுத்து நாற்று பயிராக வளர்க்கும் முறையை, சிவகங்கை தி சர்க்கரை ஆலை அதிகாரிகள், ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர். இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. கரும்பு நாற்று நர்சரி சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயி பி. ராமநாதன் கூறியதாவது: கரும்பை கணுவாக வெட்டி நடுவதால், விவசாயிகளுக்கு அதிக செலவாகிறது. "அட்மா' திட்டம் மூலம் கரும்பு சாகுபடியை அதிகரிக்க, ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகிறது. கரும்பை நாற்றுகளாக வளர்ப்பதற்கு, தி சர்க்கரை ஆலை மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், கரும்பில் உள்ள கணு பகுதியை மட்டும் வெட்டி எடுப்பதற்கு கருவி, வெயில் அதிகம் தாக்காமல் இருக்க நிழற் கூடாரம் ஆகியவற்றை வழங்கி உள்ளனர். கரும்பில் வெட்டி எடுக்கப்படும் கணுக்களை, சிறிது சுண்ணாம்பு, யூரியா, பெவிஸ்டான் உள்ளிட்ட கரைசலில் ஐந்து நிமிடம் ஊற வைக்க வேண்டும். அதனை, ஈரப்பதமுள்ள கூடை அல்லது சாக்கில் கட்டி, கணுவில் முளை வெடிக்கும் வகையில் மூடி வைத்திருக்க வேண்டும். விசேஷ வடிவில் உள்ள குழித்தட்டில் தென்னை நாற்று தும்பு கலவையுடன், கணு நாற்றுகளை, இதற்காக அமைக்கப்பட்ட நிழற் கூடாரத்திற்குள் வைக்க வேண்டும். 30 நாட்களுக்குள் இவை செடி போல் வளர்ந்து விடும். 50 எண்ணிக்கை உள்ள குழித்தட்டு 63 ரூபாய்க்கு விற்கப்படும். நாற்றங்கால் பயிரை நடுவதற்கு, ஏக்கருக்கு 2 ஆயிரம் மட்டும் செலவாகும். விவசாயிகளிடையே இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. ஒரு டன் கரும்பு 2,500 ரூபாய்க்கு வாங்கப்படுகிறது. கணு வெட்டிய கரும்பை, அதே நிறுவனத்தின் மூலம், வாங்கிய விலைக்கு திரும்ப வாங்கிக்கொள்கின்றனர். இதன் மூலம் 2 ஆயிரம் ரூபாய் திரும்ப கிடைக்கிறது. ஒரு டன் கரும்பில் இருந்து 8 ஆயிரம் கணுக்கள் வெட்டி எடுக்கலாம். மாதத்திற்கு 40 ஆயிரம் கரும்பு நாற்றுகள் உற்பத்தி செய்து வருகிறேன். கடந்த இரண்டு மாதத்தில் 50 ஆயிரம் ரூபாய் வரை சம்பாதித்துள்ளேன்.

ஒன்றரை லட்சம் கரும்பு நாற்றுகள் கேட்டு விவசாயிகள் ஆர்டர் கொடுத்துள்ளனர். இந்நிலையில், கணுவை விரைவாக வெட்டும் வகையில் தானியங்கி கருவி வாங்கவும் தீர்மானித்துள்ளேன்.

இதன் மூலம் கரும்பு நாற்றுக்கு தேவையான கணுவை விரைந்து வெட்ட முடியும், என்றார். **தொடர்புக்கு 90959 74287.**

**நவீன தொழில்நுட்பம்**



**கோவைக்காய் சாகுபடி:** துரிதமாக படர்ந்து வளரக்கூடிய காய்கறியான கோவைக்காய் மருத்துவ குணங்கள் நிறைந்தது. சமையலுக்குத்தவிர பச்சைக்காய்கறியாக உண்பதற்கும் வற்றல் போடுவதற்கும் மிகவும் ஏற்றது. பல்லாண்டு பயிரான இது ஆண்டு முழுவதும் விளைச்சலைத் தரக்கூடியது. குளிர் அதிகம் உள்ள பகுதிகளில் மட்டும் 8-9 மாதங்களுக்கு விளையும். **ரகங்கள்:** வணிக ரீதியாக பிரபலமான ரகங்கள் இல்லை. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் ஆணைக்கட்டி என்ற இடத்திலுள்ள கோவைக் கொடியிலிருந்து மரபுவழி தேர்வு செய்யப்பட்ட ஒரு வளர்ப்பு ஆராய்ச்சியில் உள்ளது. இதன் காய் நீண்ட பச்சை நிறத்தில், வெண்மை நிறக் கோடுகளைக் கொண்டதாக சராசரியாக ஒரு எக்டருக்கு 65-70 டன் காய்களை விளைச்சலாக தரவல்லது.

கோவைக்காய் பயிர் ஓரளவு வெப்பம் தாங்கி வளரக்கூடியது. நல்ல வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான மண்ணில் நன்கு வளரும். களர் உப்பு நிறைந்த மண்ணில் நன்கு வளர்ந்து விளைச்சலைத் தரக்கூடியது.

**இனப்பெருக்கம்:** இளந்தண்டிலிருந்து பெறப்பட்ட வெட்டுக்குச்சிகள் மூலம் பொதுவாக இனப்பெருக்கம் செய்யலாம். நன்கு வளர்ந்த தண்டில் பருமனான பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட 20லிருந்து 30 செ.மீ. நீளமும் 1-2 செ.மீ. பருமனும் உள்ள வெட்டுக்குச்சிகளை மேட்டுப் பாத்திகளில் 25 செ.மீ. து 15 செ.மீ. அளவுள்ள பாலிதீன் பைகளில் 1:1:1 என்ற விகிதத்தில் மணி, மணல், மக்கிய தொழு உரம் கலந்து நிரப்பி நடவேண்டும். தினமும் நீர் ஊற்றி பராமரித்தால் 35-40 நாளில் நன்கு வேர் பிடித்துவிடும்.

**நடவு:** நன்கு வேர் பிடித்த வெட்டுக்குச்சிகளை எடுத்து நடவுக்குப் பயன்படுத்த வேண்டும். 2.5 து

2.5 மீட்டர் இடைவெளியில் 2 அடி நீள, அகல, ஆழமுள்ள குழிகளை எடுத்து 15 நாட்கள் சூரிய ஒளி படும்படி வைத்திருக்க வேண்டும். பின்னர் குழி ஒன்றுக்கு மேல் மண், லீ-1 கிலோ மக்கிய தொழு உரம், லீ கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து குழிகளை நிரப்பி நடவேண்டும். கோடைப்பருவம் நீங்கலாக ஆண்டு முழுவதும் கோவைச்செடி நடவு செய்யலாம். எனினும் ஜுன் - ஜுலை நடவுக்கு ஏற்ற பருவமாகும்.

**பந்தல் அமைத்தல்:** கோவைக்காய் பந்தலில் படரும் பயிர். எனவே கொடி வகைக் காய்கறிகளுக்கு அமைப்பது போல பந்தல் அமைத்தல் மிகவும் அவசியமானது.

**பூ, காய் பிடிக்கும் பருவம்:** நடவுச்செடி கோவைக்காய் வேர் பிடித்ததிலிருந்து சுமார் 45-50 நாட்களில் பூக்கள் தோன்றி 50 நாட்களில் காய்க்கும் பருவத்திற்கு வரும். காய்கள் மகரந்த சேர்க்கை இல்லாமல் உருவாகும் தன்மையைக் கொண்டது. ஆண்டு முழுவதும் காய்களை அறுவடை செய்வதால் கோவைக்காய் வளர்ச்சிக்கு ஆண்டுக்கு 4 முறை உரமிடுதல் அவசியம். ஒரு எக்டருக்கு 60, 40, 40 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துள்ள உரங்களை இடவேண்டும். தழை, சாம்பல் சத்தினை நான்குபாகமாக பிரித்து 3 மாதங்களுக்கு ஒரு முறை வைக்க வேண்டும். தழைச்சத்தில் நான்கில் ஒரு பகுதியும், மணிச்சத்தினை நடும்பொழுது அடியுரமாகவும் கொடுக்க வேண்டும். மேலும் நுண்ணூட்டச் சத்துக்களை அவ்வப்போது இடுவதன் மூலம் சத்துக்கள் நிறைந்த தரமான காய்களை அதிக அளவில் பெறலாம். சொட்டு நீர் உரப்பாசனம் வழியாகவும் தற்போது கோவைக்காய் பயிரிடப் படுகிறது. சுமார் நான்கு ஐந்து நாட்கள் இடைவெளியில் மண்ணின் தன்மைக்கேற்ப நீர் பாய்ச்சுதல் நல்லது. சொட்டு நீர்ப்பாசன முறையில் வளர்த்தால் ஒரு நாளைக்கு சுமாராக செடி ஒன்றிற்கு 10 லிட்டர் நீர் கொடுக்கலாம். மண்ணை அவ்வப்போது கொத்திவிடுவதும் களை எடுப்பதும் அவசியம்.

**செடியை வடிவமைத்தலும் கவாத்து செய்தலும்:** கோவைக்காய் கொடியை தரையிலிருந்து 1.5 - 1.75மீ உயரத்தில் பந்தலில் படரவிட வேண்டும். ஆரம்ப காலங்களில் தரை மட்டத்திலிருந்து பந்தல் உயரம் வரை சணல் அல்லது மெல்லிய பிளாஸ்டிக் கயிறு கட்டிவிட்டாலும் பந்தலில் எளிதாக படர்ந்து வளரும். பந்தல் ........ வரை ஒரே தண்டுகளை கொடியாக செல்ல ஏற்றி, பின் பக்கக்கிளைகளை பரப்பிவிடுவதன் மூலம் காய்கள் திடமானதாகவும் எல்லா கணுக்களிலும் வர ஏதுவாகிறது. அதிகப்படியாக வளரும் கிளைகளை வெட்டிவிட வேண்டும். ஒரு ஆண்டு வளர்ச்சி அடைந்ததும் குளிர்காலத்தில் பந்தலை ஒட்டி 1.5 மீட்டர் உயரத்திற்கு நன்கு வளர்ந்த தண்டுகளை வெட்டி கவாத்து செய்ய வேண்டும். பின்னர் உரம் வைத்து நீர் பாய்ச்சினால் நன்கு தழைத்து வளரும்.

செடி நட்ட 50-60 நாட்களில் காய்கறி அறுவடைக்கு வரும். நல்ல பச்சைநிற காய்களை 2 நாட்களுக்கு ஒரு முறை பறிக்கலாம். வருடத்திற்கு ஒரு செடியிலிருந்து 30-40 கிலோ காய்கள் பெறலாம்.

(தகவல்: முனைவர் பி.ஜான்சிராணி, முனைவர் சி.சிபா, வெ.ராஜ்ஸ்ரீ, காய்கறிப்பயிர் துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422-661 1289).

**கரும்பு சாகுபடியில் உற்பத்தியும் உற்பத்தித் திறனும்**



**உற்பத்தி திறனை அதிகரிக்க காரணங்கள்:** சாகுபடிக்கு தேர்ந்தெடுத்த நிலத்தை ஆழமாக உழுது, கட்டிகள் இல்லாத நிலையை உண்டாக்க வேண்டும். நிலத்திற்கு தாராளமாக இயற்கை உரம் (தொழு உரம்) இட்டு பூமியின் நீர்பிடிப்புத் தன்மையை அதிகரிக்க வேண்டும். நடுவதற்கு ஏற்ற விதை கரும்பினை உபயோகிக்க வேண்டும்.
6 முதல் 7 மாத வயதுடைய கரும்பில் இருந்து விதை தயாரிக்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை அனுசரிக்க வேண்டும்.
நிலத்தை டிராக்டர் மூலம் ஆழமாக மூன்று முறை இடைவெளி விட்டு மண் நன்றாக பொலபொலப்பு அடையும் வரை உழவேண்டும். இதனால் கரும்பு பயிர் சாயாமல் நிற்க ஏதுவாகிறது.

கரும்பு சாகுபடிக்கு முன்பட்டம் சிறந்தது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் சாகுபடியை துவங்க வேண்டும். கரும்பு சீரான வளர்ச்சியை பெற்று பூச்சி நோய் தாக்குதலுக்கு உட்படாமல் நல்ல மகசூல் கிட்டும். சாகுபடிக்கு நல்ல ரகத்தை தேர்ந்தெடுக்கலாம்.
சிறந்த சாகுபடிக்கு ஏற்படும் செலவு கீழே கொடுக்கப் பட்டுள்ளது. இதை படிக்கும் போது பொதுவாக கரும்பு சாகுபடி முறையும் தெரிந்துகொள்ளலாம்.
**குறிப்பு:** கரும்பு நடவு செய்த 12வது மாதத்தில் கரும்பு அறுவடை மேற்கொள்வது சிறந்தது. கரும்பு ஆலைகள் குறிப்பிட்ட காலத்தில் அறுவடைக்கு உத்திரவு கொடுத்து, நல்ல விலை அளித்து விவசாயிகள் நலனை காக்க வேண்டும்.
**சாகுபடி செலவு ஒரு ஏக்கருக்கு:** ரூ.41,040.00 மகசூல் 40 டன்கள் ஒரு ஏக்கரில் ஒரு டன் விலை (தனியார் சர்க்கரை ஆலை பழைய சீவரம்) ரூ.2,250 x 40 டன்கள் - ரூ. 90,000.00

| | | | |
|---|---|---|---|
| வரவு | - | ரூ. | 90,000.00 |
| செலவு | - | ரூ. | 61,000.00 |
| லாபம் | - | ரூ. | 29,000.00 |

**கரும்பு சாகுபடியில் வெல்லம் காய்ச்சுவது:** மாகரல் கிராமம் (காஞ்சிபுரம் மாவட்டம்) பஞ்சாபகேசனை ஏக்கரில் ரூ.29,000 லாபம் எடுத்ததற்கு பாராட்டியபோது அவர், ""என்னால் இயன்றதை செய்தேன். ஆனால் மேலும் பாடுபட்டால் கரும்பினை விற்காமல் வெல்லம் செய்து விற்றால் ஏக்கரில் ரூ.50,000 லாபம் கிடைக்கும்'' என்றார்.

**விவசாயிகள் கவனிக்க:** தற்போது கரும்பு சாகுபடியில் முன்னேற்றம் காண முடிகிறது. எக்டேரில் 75 டன் மகசூலாக இருந்தது. தற்போது 100 டன்னாக உயர்ந்துள்ளது. விவசாய இலாகா அதிகாரிகளும் ஆலைகளைச் சேர்ந்த கரும்பு சாகுபடிஅதிகாரிகளும் அதிக மகசூல் எடுக்க விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கி வருகின்றனர். ஆதலால் விவசாயிகள் மேற்கண்ட அதிகாரிகளைச் சந்தித்து தங்களது சந்தேகங்களுக்கு விளக்கங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். இதனால் தமிழகத்தில் கரும்பு உற்பத்தி பலமடங்கு அதிகரிக்கும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**ஏப்ரல் மாதத்தில் இயற்கை ரப்பர் இறக்குமதி 38 சதவீதம் சரிவடைந்தது**

ஏப்ரல் மாதத்தில் இயற்கை ரப்பர் இறக்குமதி 38 சதவீதம் சரிந்து 10,871 டன்னாக குறைந்துள்ளது. உள்நாட்டில் ரப்பர் விலை குறைந்துள்ளதால், டயர் உற்பத்தி நிறுவனங்கள் இறக்குமதியை குறைத்துள்ளனர் என ரப்பர் வாரியம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நாட்டின் மொத்த ரப்பர் உற்பத்தி, அம்மாதத்தில் சென்ற ஆண்டின் இதே மாதத்தைவிட 0.6 சதவீதம் அதிகரித்து 53,000 டன்னாக உயர்ந்துள்ளது. இயற்கை ரப்பர் உற்பத்தியில் நம்நாடு நான்காவது இடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த இயற்கை ரப்பர் உற்பத்தியில் கேரளாவின் பங்களிப்பு 90 சதவீதமாக உள்ளது.

பொதுவாக அக்டோபர் முதல் மார்ச் வரையிலான ஆறு மாதங்களில் பருவநிலை சாதகமாக இருப்பதால் ரப்பர் தோட்டங்களில் பால் வடிப்பு பணி தீவிரமாக இருக்கும். இதன் காரணமாக உற்பத்தி அதிகரித்து உள்நாட்டில் சப்ளை அதிகரிக்கும். எனவே இறக்குமதி வெகுவாக குறையும். தற்போது ஏப்ரல் மாதத்தில் உற்பத்தி சிறிது அதிகரித்து உள்ளது. இறக்குமதி சரிவடைய இதுவும் ஒரு காரணம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலிருந்து ரப்பர் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது.

**முட்நாட்டூரில் விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் பவர்டில்லர் உழவர்பெருவிழாவில் வழங்கப்பட்டது**

முட்நாட்டூரில் நடந்த உழவர் பெருவிழாவில் பழங்குடியினர் விவசா யக்குழுவிற்கு 100 சதவீத மானியத்தில் பவர்டில்லர் வழங்கப்பட்டது.

**உழவர் பெருவிழா**

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலை வட்டாரம் முட்நாட்டூர் கிரா மத்தில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவுக்கு ஜமுனா மரத்தூர் ஒன்றியக்குழு தலை வர் ராஜமாணிக்கம் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன் சிலர் மணி, ஊராட்சி மன்ற தலைவர் செல்லன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி வேளாண்மை அலுவலர் மரியஜோசப் வரவேற்றார்.

போளூர் வேளாண்மை உதவி இயக்குனர் கோ.கண் ணகி கலந்து கொண்டு வேளாண்மைத்துறையில் விவசாயிகளுக்கான மானிய திட்டங்கள் பற்றி விளக்கி னார். திருந்திய

நெல்சாகுபடி பற்றி வேளாண்மை அலுவலர் சித்ராவும், தோட்டக்கலைத் துறையில் விவசாயிகளுக் கான திட்டங்கள் பற்றி திருவேங்கடமும், பொறியி யல் துறை சார்பில் இளநிலை பொறியாளர் ரங்கநாதனும் விளக்கினர்.

**பவர் டில்லர்**

விழாவில் கும்பலூர் கிரா மப்பழங்குடியினர் விவசாய குழுவிற்கு 100 சதவீத மானி யத்தில் பவர் டில்லரை ஒன்றி யக்குழு தலைவர் ராஜ மாணிக்கம் வழங்கினார். மானிய விலையில் உயிர் உரங்கள், நுண்ணூட்டச் சத்து கலவைகளும் வழங்கப் பட்டது.

முடிவில் அட்மாதிட்ட வட் டார தொழில்நுட்ப மேலா ளர் செல்வபாண்டியன் நன்றி கூறினார்.

**கூடலூரில் பலாபழங்களை தின்பதற்காக தனியார் தோட்ட கதவை உடைத்து காட்டு யானைகள் அட்டகாசம்**

கூடலூரில் பலாப் பழங் களை தின்பதற்காக இரவு நேரத்தில் தனியார் தோட்டத்துக்குள் புகுந்து இரும்பு கதவை காட்டு யானைகள் உடைத்து அட்டகாசம் செய்தன.

<u>பலாப்பழ சீசன்</u>

கூடலூர் பகுதியில் பலாப் பழ சீசன் தொடங்கியுள் ளது. ஏற்கனவே கடும் வறட்சி யால் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டு காட்டு யானைகள் சிக்கி தவித்து வருகின்ற நிலை யில் பலாப் பழங்கள் காய்க்க தொடங்கி உள்ளது காட்டு யானைகள் மத்தியில் உற்சாகம் ஏற்பட்டுள்ளது. இந்த பலாப்பழங்களை தின்பதற் காக யானைகள் விவசாய நிலங்கள் மற்றும் ஊருக்குள் படையெடுத்து வருகின்றன.

தேவர்சோலை மச்சிக் கொல்லி, மட்டம், செம்பக் கொல்லி, போஸ்பாரா உள் ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகள் இரவு நேரத்தில் புகுந்து பலாப்பழங்களை தின்று வருகின்றன. இதனால் கடந்த வாரம் காட்டு யானை கள் தாக்கி ஆதிவாசி கோவில் சேதம் அடைந்தது. இதனால் கோவில் விழாவை ஆதிவாசி மக்கள் வேறு தேதிக்கு மாற்றி வைத்துள்ளனர்.

<u>கதவு சேதம்</u>

இதேபோல் கூடலூர்27வது மைல், மேல் கூடலூர், ஹெல்த் கேம்ப், கெவிப்பாரா, பால வாடி உள்ளிட்ட பகுதிகளில் இரவு நேரத்தில் ஒற்றை காட்டு யானை உள்பட 4 காட்டு யானைகள் முகாமிட்டுள்ளன. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 2 மணி அளவில் கூடலூர் கெவிப் பாரா தனியார் தோட்டத் துக்குள் 2 காட்டு யானைகள் புகுந்தது.

பின்னர் அங்குள்ள மரங்க ளில் இருந்த பலாப்பழங்களை பறித்து சுவைத்து தின்றன. இதை கண்ட அப்பகுதி மக்கள் காட்டு யானைகளை துரத்தும் பணியில் ஈடுபட்டனர். இருப் பினும் யானைகள்

அங்கு இருந்து செல்லவில்லை. விடி யற்காலை வரை அங்கு நின்ற காட்டு யானைகள் பின்னர் தோட்ட வாயிலில் உள்ள இரும்பு கதவை உடைத்து சேதப்படுத்தி விட்டு சென் றன.

பந்தலூர்

இதேபோல் பந்தலூர் தாலுகா சேரங் கோடு அரசு தேயிலை தோட்டம் ரேஞ்ச் எண்.1 திருவள்ளுவர் நகர், படச்சேரி, சிங்கோனா உள் ளிட்ட பகுதிகளில் பல மனிதர்களை கொன்ற ஒற்றை காட்டு யானை முகாமிட்டுள் ளது. இதனால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர்.

**ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணை வரலாறு காணாத அளவில் வறண்டது**

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை வரலாறு காணாத அளவில் வறண்டது.

பவானிசாகர் அணை....

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரமாக இருப்பது பவானிசாகர் அணை. 120 அடி உயரம் கொண்ட இந்த அணையில் 15 அடி சகதி போக 105 அடிக்கு தண்ணீர் தேக்க முடியும். முதுமலையில் இருந்து வரும் மோயாறும், நீலகரி மலையில் இருந்து வரும் பவானி ஆறும் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளாகும்.

இந்த அணையில் இருந்து ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி வாய்க்கால் மூலம், 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும், காலிங்கராயன், தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்கள் மூலம் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. இது தவிர புஞ்சைபுளியம்பட்டி, சத்தியமங்கலம், கோபி நகராட்சி பகுதி மற்றும் பல்வேறு பேரூராட்சி, ஊராட்சி பகுதி மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது.

வறண்டது...

இந்தநிலையில் கடந்த ஆண்டு நீர்ப்பிடிப்பு பகுதியில் பருவமழை வெகுவாக குறைந்தது. பல மாதங்களாக மழையே பெய்யவில்லை. இதனால் பவானிசாகர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு குறைந்துகொண்டே வந்தது. மேலும் அவ்வப்போது பயிர்களை காப்பாற்ற உயிர் தண்ணீர் திறந்து விடப்படுவதாலும் நீர் மட்டம் மேலும் நீர் மட்டம் சரிந்தது.

நேற்று பகல் 12 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 29.70 அடியாக இருந்தது. அணைக்கு விளாடிக்கு 205 கன அடி தண்ணீர் வந்துகொண்டு இருந்தது. அணையில் இருந்து ஆற்றுக்கு 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. வாய்க்காலுக்கு 5 கன அடி தண்ணீர் விடப்படுகிறது.

குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும்

கடந்த ஆண்டு இதே நாளில் பவானிசாகர் அணையில் 49.20 அடி தண்ணீர் இருந்தது.

அணையில் நீர்மட்டம் மேலும் குறைந்தால், ஈரோடு மாவட்டத்தில் குடிநீருக்கே தட்டுப்படும் ஏற்படும் சூழ்நிலை உண்டாகும் என்று பொதுமக்கள் கவலை அடைந்துள்ளார்கள்.

**கடும் வறட்சி எதிரொலி அத்தியூர் சந்தையில் ஆட்டுக்குட்டிகள் விற்பனை**

கடும் வறட்சியின் எதிரொலியாக அத்தி யூர் சந்தையில் 3 ஆட்டுக் குட்டிகள் ரூ.10 ஆயிரத்துக்கு விற் பனையானது.

**மேய்ச்சல் நிலங்கள் காய்ந்தது**

விழுப்புரம் மாவட்டம் ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் கடந்த பல மாதங்களாக மழை பெய்யவில்லை. இதன் காரணமாக ஏரி, குளம், கிணறு போன்ற நீர்நிலைகள் நீர் மட்டம் குறைந்து விவசாய நிலங்கள் வறண்டு கிடக் கிறது.

ஆடு, மாடு போன்ற கால்நடை வளர்ப்பவர்கள், மேய்ச்சல் நிலம் இன்றி சிரமப்படுகின்றனர். மேலும் வைக்கோல், புல் போன்ற தீவனத்தின் விலையும் உயர்ந்துள்ளதால் கால் நடைகளை தொடர்ந்து வளர்க்க முடியாத நிலைக்கு மக்கள் ஆளாகியுள்ளனர்.

**ஆட்டுக்குட்டிகள் விற்பனை**

20, 30 ஆடுகளை வைத்திருப்பவர்கள், அதற்கு தீனி கொடுக்க தினமும் பல கிலோ மீட்டர் மேய்ச்சலுக்காக செல்கின்றனர். அப்படி யிருந்தும் சரியான உணவு கிடைப்பதில்லை. எனவே குட்டிகளை வளர்க்க முடி யாமல் விற்று வருகின்றனர்.

நேற்று நடைபெற்ற அத்தியூர் சந்தைக்கு சுற்றுப்புற கிராமங்களில் இருந்து ஆயிரத்துக்கும் அதிகமான வெள்ளாடு குட்டிகள் விற்பனைக்கு வந்தது. இதில் குறிப்பிட்ட சில ஆடுகளை தமிழக அரசின் இலவச திட்டத்துக்கு கால்நடை மருத்துவர்கள் வாங்கினர்.

**3 ஆடுகள் ரூ.10 ஆயிரம்**

பிற ஆடுகளை இறைச்சி கடைக்காரர்கள், கால்நடை வளர்ப்பவர்கள் வாங்கினர். 3 ஆட்டுக்குட்டிகள் ரூ.10 ஆயிரத் துக்கு விற்பனை யானது. ரிஷிவந்தியம் பகுதியில் தொடரும் வறட்சி யால் ஆடு வளர்ப்பவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.

**அன்னவாசல் பகுதியில் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள் உழவர் பெருவிழாவில் வழங்கப்பட்டன**

அன்னவாசல் பகுதி யில் நடந்த உழவர் பெரு விழாவில் விவசாயி களுக்கு மானிய விலை யில் இடுபொருட்கள் வழங்கப்பட்டன.

**உழவர் பெருவிழா**

அன்னவாசல் வட்டாரத் தில் வேளாண்மை துறை சார்பில் பனம்பட்டி மற்றும் மதியநல்லூர் ஆகிய இரு வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடந்தது.

விழாவுக்கு மதியநல்லூரில் ஊராட்சி மன்றத் தலைவர் ராமசாமி, பனம்பட்டியில் ஊராட்சி மன்ற தலைவர் மலையப்பன் ஆகியோர் தலைமை தாங்கினார்கள். விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர் சிங்காரம் வரவேற்று பேசினார்.

வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங் கள் மற்றும் மானியங்கள் பற்றி வேளாண்மை அலுவலர் சுமித்ராதேவி மற்றும் வேளாண் சார்ந்த துறைகளின் திட்டங்கள் பற்றி அலுவலர்கள் எடுத்து கூறினார்கள்.

விழா வில் விவசாயிகளுக்கு எளி தாக புரியும் வகையில் கண் காட்சி பார்வைக்கு வைக்கப் பட்டது.

**தொழில்நுட்ப கையேடுகள்**

விழாவில், விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள், தொழில்நுட்ப கையேடுகள், தொழில்நுட்ப பிரசுரங்கள் ஆகியவை வழங்கப்பட்டன மற்றும் விவசாயிகளுக்கு மானிய விலையில் நுண் சத்துக்கள், கைத்தெளிப்பான், ஜிப்சம் ஆகிய இடுபொருட்கள் வேளா ண்மை துறை சார்பாக பயனாளிகளுக்கு வழங்கப் பட்டது.

முடிவில் அட்மா திட்ட அலுவலர் ஆரோக்கிய ராஜ் நன்றி கூறினார்.

**விவசாயம் சம்பந்தப்பட்ட படிப்பு படித்தவர்கள் இலவச பயிற்சி பெற விண்ணப்பிக்க வேண்டுகோள்**

விவசாயம் சம்பந்தப் பட்ட படிப்பு படித்த வர்கள் இலவச பயிற்சி பெற விண்ணப்பிக்க வேண்டுகோள் விடப் பட்டுள்ளது.

**சாகுபடி பரப்பு**

அரியலூர் மாவட்டத்தில் மொத்தம் 1 லட்சத்து 6 ஆயிரத்து 409 ஹெக்டர் சாகுபடி பரப்பாகும். இதில் 67 ஆயிரத்து 155 ஹெக்டர் மானாவரி பரப்பும் 39 ஆயிரத்து 254 ஹெக்டர் இறவை சாகுபடி பரப்பும் பயிரிடப்பட்டு வருகிறது.

பொதுவான சாகுபடி பரப்பான நெல் 26 ஆயிரம் ஹெக்டரிலும் மக்காச் சோளம் 16 ஆயிரம் ஹெக்டரிலும் பயறு வகைப்பயிர்கள் 3 ஆயிரத்து 400 ஹெக்டரிலும், கடலை 11 ஆயிரம் ஹெக்டரிலும், எள் 2ஆயிரம் ஹெக்டரிலும், பருத்தி 8ஆயிரம் ஹெக்டரிலும், முந்திரி 27 ஆயிரத்து 500 ஹெக்டரிலும், கரும்பு 8ஆயிரம் ஹெக்டரிலும், மிளகாய் 500 ஹெக்டரிலும், மரவள்ளி 400 ஹெக்டரிலும், புளி 293 ஹெக்டரிலும், மா 490 ஹெக்டரிலும், கத்திரி 170 ஹெக்டரிலும் மற்றும் வாழை 201 ஹெக்டரிலும் சாகுபடி செய்யப்படுகிறது.

**வேளாண்மை சார்ந்த தொழில்**

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில் தொடங்குவதற்குண்டான உகந்த சூழ்நிலை உள்ளது. வேளாண் உற்பத்தி பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்தல். பதப் படுத்துதல், தரம் பிரித்தல் மற்றும் துணைப் பொருட்கள் தயாரித்தல் போன்ற தொழில் களை இம்மாவட்டத்தில் தொடங்குவதன் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் வேளாண்மையில் வருமான மும் அதிகரிக்க வாய்ப் புள்ளது.

எனவே, 2 அளவில் விவ சாயம் தொடர்பான பாடம் படித்தவர்கள், விவ சாய பட்டதாரிகள் (இள நிலை மற்றும் முதுநிலை) விவசாயபட்டயம் பெற்ற வர்கள் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளான கால்நடைத்துறை, மீன் வளத்துறை, தோட்டக் கலைத் துறை, வனத்துறை மற்றும் பால்வளத்துறை முதலிய வற்றில் ஏதேனும் ஒரு பட்டப் படிப்போ, பட்டயப் படிப்போ படித்தவர்களுக்கு விவசாயத் தொழிலில் முன்னோடியாக்க மூன்று மாத காலம் பயிற்சியுடன் தங்கும் வசதியும் இலவசமாக சென்னையில் உள்ள நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

**விண்ணப்பிக்க வேண்டுகோள்**

ஆர்வமுள்ளவர்கள் சென்னை அண்ணாநகரில் உள்ள கூட்டுறவு மேலாண்மை நிலையம், ஒருங்கிணைந்த பயிற்சி நிலையம், நிறுவனத்தை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

பயிற்சிக்கான விண்ணப் பங்களை மேற்கண்ட பயிற்சி மையத்தில் நேரடியாகவும் அல்லது பயிற்சி மையத்தின் இணைய தளம் வழியாக தர பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என மாவட்ட கலெக்டர் ரவிக்குமார் தெரி வித்துள்ளார்.

**அரவக்குறிச்சி பகுதியில் விதை மஞ்சள் விலை வீழ்ச்சி பயிரிட விவசாயிகள் தயக்கம்**

அரவக்குறிச்சி பகுதியில் விதை மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. இருந்த போதிலும் மஞ்சளை வாங்கி விவசாயம் செய்ய விவசாயிகள் தயங்குகிறார்கள்.

**மஞ்சள் பயிர்**

அரவக்குறிச்சி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி பொதுமக்கள் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். அமராவதி ஆற்றுப்பாசனம் உள்ள பகுதிகளான ராஜபுரம், சீரங்ககவுண்டனூர், நம்பா கவுண்டனூர், தொக்குப் பட்டிபுதூர், சின்னம நாயக்கனூர் உள்ளிட்ட கிராமங்கள் மஞ்சள் மற்றும் வாழை பயிரிடுகின்றனர்.

ஆனி மற்றும் ஆடி பட்டத்தில் மஞ்சள் நடவு செய்வர். ஒரு ஏக்கருக்கு 1 டன் விதை மஞ்சள் தேவைப் படுகிறது. பயிர் செய்த 10 மாதங்களில் மகசூல் வந்து விடும். ஒரு ஏக்கர் நிலத்தில் சுமார் 8 டன் முதல் 14 டன் வரை மகசூல் கிடைக்கும். 5 கிலோ பச்சை மஞ்சள் வேகவைத்தால் ஒரு கிலோ அல்லது 1½ கிலோ கிடைக்கும். கடந்த ஆண்டு வேகவைத்த மஞ்சள் கிலோ ரூ 35 முதல் 40 வரை விற்பனையானது. வேகவைக்கப்படாத விதை மஞ்சள் கிலோ ரூ 25 முதல் ரூ.30 வரை விற்பனை ஆனது.

**விலை வீழ்ச்சி**

மழை இல்லாததால் விவசாயிகள் மஞ்சள் பயிரிட தயங்குகின்றனர். இதனால் விதை மஞ்சள் விலை குறைந்து ஒரு கிலோ ரூ. 18 முதல் ரூ. 22 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து மஞ்சள் வியாபாரிகள் கூறிய தாவது:

அரவக்குறிச்சி பகுதியில் மஞ்சள் அதிகம் பயிரிடு கின்றனர். இங்கு விளையும் மஞ்சள் தமிழகத்தில் மஞ்சள் மார்க்கெட்டான ஈரோட்டிற்கும், மகாராஷ்ட்ரா, கர்நாடகா, ஆந்திரா, கேரளா, அஸ்ஸாம், குஜராத் ஆகிய வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றது. இந்த ஆண்டு மழை பொய்த்து விட்டதால் மஞ்சள் பயிரிட பெரும்பாலான விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் மஞ்சள் இந்த ஆண்டு விரை மஞ்சள் விலை குறைந்து உள்ளது என்றனர்.

**விவசாயிகள் தயக்கம்**

இது பற்றி அந்த பகுதி விவசாயிகள் கூறும்போது, மஞ்சள் பயிரிட போதிய தண்ணீர் இல்லை. மஞ்சள் பயிரிட கூலி வேலைக்கு வரும் ஆண் ஒருவருக்கு ரூ.250ம், பெண் ஒருவருக்கு ரூ.150ம் வழங்க வேண்டி உள்ளது. கஷ்டப்பட்டு மஞ்சள் விளைய வைத்தால் மகசூல் வரும் போது விலை கூடுதலாக இருந்தால் விவசாயிக்கு மகிழ்ச்சியாக தரும்.

அதேபோல் விலை மிகவும் குறைந்து விட்டால் பெரும் நஷ்டத்திற்கு ஆளாக வேண்டியது உள்ளது எனவே மஞ்சள் பயிரிட்டு நஷ்டப் படுவதைவிட அதை மகசூல் செய்யாமல் இருப்பதே மேல் என்றனர்.

**கல்லல், பாகனேரி பகுதியில் மாம்பழம் விளைச்சல் குறைவு விவசாயிகள் கவலை**

பாகனேரி, மற்றும் கல்லல் பகுதியில் மாம் பழம் விளைச்சல் குறைந் ததால் விவசாயி கள் மிகவும் கவலையடைந் துள் ளனர்.

**மாந்தோப்பு**

பாகனேரி, துரும்புப்பட்டி, சொக்கநாதபுரம், சிலந்தகுடி, மதகுபட்டி, அலவாக் கோட்டை, ஒக்கூர், பிரவலூர், நெற் புகப்பட்டி, கூமாச்சிப் பட்டி, முத்துப்பட்டி, ஆகிய கிராமங்கள் உள்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவ சாயிகள் மாந்தோட்டம் அமைத்துள்ளனர்.

அதில் உயர்ரகம், ஒட்டு ரகங்களான பங்கஜனவள்ளி, ருமேனியா, கிரேப், சேலம்சப் பட்டை, காசாலட்டு, மல் கோவா, போன்றவைகளை பயி ரிட்டிருந்தனர். அதன் மூலம் அவர்களுக்கு கடந்த ஆண்டுகளில் நல்ல விளைச்சல் கொடுத்து அதிக லாபம் அடைந்தனர்.

**விளைச்சல் குறைவு**

இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததாலும், போதிய தண்ணீர் இல்லாததாலும் மாமரங்கள் குறைவான பூக் களே பூத்தது. விளைவு விளைச் சல் இன்றி போனது. சில மாந் தோட்டங்களில் விவசாயிகள் மாமரங்களுக்கு கிணற்று தண் ணீரை பாய்ச்சி விளைய வைக்க முயற்சி மேற்கொண்ட னர்.

பலன் சில மரங்கள் காய் த்தன. சில மரங்கள் காய்த்தும் அடிக்கும் வெயிலை தாங்க முடியாமல் பிஞ்சிலே வெம்பி கொட்டின. இதனால் மாந் தோட்ட விவசாயிகள் இந்த வருடம் பெரும் நஷ்டத்தையே அடைந்தனர். ஆகையால் பாகனேரி, கல்லல் பகுதி மாந்தோட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகை வழங்கும் பணி தொடங்கியது கலெக்டர் ஆஷிஷ்குமார் தகவல்**

“தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகை வழங்கும் பணி தொடங்கியது” என்று மாவட்ட கலெக்டர் ஆஷிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

<u>வறட்சி நிவாரணம்</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசால் நிவாரணத் தொகை அறிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி நிவாரணத் தொகை பெறும் விவசாயிகளின் பட்டியல் தாலுகா அலுவலகம், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட வங்கிகளில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ளது.

நிவாரணத் தொகை வழங்கும் பணி நேற்று முன்தினம் தொடங்கப்பட்டு உள்ளது. முதற்கட்டமாக ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி ஆகிய தாலுகாக்களில் விவசாயிகளின் வங்கி கணக்கு மூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கோவில்பட்டி, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் மற்றும் எட்டயபுரம் ஆகிய தாலுகாக்களில் பயிர் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணத் தொகை அவர்களது வங்கி கணக்கு மூலம் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆஷிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

**காய்கறி, பழம் விலை குறைந்தது மார்ச்சில் பணவீக்கம் 4.89 சதவீதமாக சரிவு**



புதுடெல்லி: காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலை குறைந்ததால், பணவீக்கம் 2009ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு பின்னர் 4.89 சதவீதமாக குறைந்துள்ளது. மொத்த விலைப்புள்ளி அடிப்படையிலான விலைவாசி அடிப்படையில், மார்ச் மாதத்தில் விலைவாசி 5.96 சதவீதமாக இருந்தது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இது 7.50 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், கடந்த மாதம் இது 4.89 சதவீதமாக குறைந்தது. 2009ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பணவீக்கம் 4.78 சதவீதமாக இருந்தது. அதற்கு பின்னர் குறைந்த அளவாக கடந்த மாதத்தில் பணவீக்க்கம் குறைந்துள்ளது

**பாதூர் கிராமத்தில் நாசமான வாழை மரங்கள்**

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் நேற்று முன்தினம் மாலை காற்றுடன் கூடிய லேசான மழை பெய்தது. இந்நிலை யில் பாதூர், செங்குறிச்சி கிராமங்களில் சுமார் அரைமணிநேரம் சூறாவளி காற்று சுழன்றடித்தது.இதில் பாதூர் கிராமத்தை சேர்ந்த கருணாமூர்த்தி என்பருக்கு சொந்தமான வாழை தோட்டத்தில் இருந்த சுமார்

1 ஏக்கர் பரப்பளவிலான வாழை மரங்கள் வேறோடு சாய்ந்தது. சூறாவளி காற்றில் தேசம் அடைந்த வாழைக்கு நிவாரண உதவிகள் வழங்க வேண்டும் என விவசாயி கருணாமூர்த்தி கோரிக்கை வைத்துள்ளார். இதேபோல் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் வேரோடு சாய்ந்தது.

**விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை அருகே வெள்ளையூர் கிராமத்தில் வேளாண்மை துறையின் சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் கருணாநிதி தலைமை தாங்கினார். ஒன்றிய சேர்மன் பாலு, துணை சேர்மன் சாயிராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை அலுவலர் கவிதா வரவேற்றார். இதில் குமரகுரு எம்எல்ஏ கலந்துகொண்டு உளுந்து விதைப்பை மற்றும் மரவள்ளி கட்டை வெட்டு இயந்திரம், கத்திரிவிதை உள்ளிட்டவைகளை வழங்கி பேசினார். ஆத்மா திட்ட அலுவலர் முத்துலட்சுமி, துணை வேளாண்மை அலுவலர் அலெக்சாண்டர், விரிவாக்க அலுவலர் பொன்காமராஜ், உதவி வேளாண்மை அலுவலர்கள் வடிவேல்முருகன், முருகன், அன்பழகன், அந்தோணி சாமி உள்ளிட்ட பலர்
கலந்துகொண்டனர்.

**சென்னப்பன் கொட்டாயில் உழவர் பெருவிழா**

பாலக்கோடு, : தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அடுத்த சென்னப்பன் கொட்டாயில் உழவர் பெருவிழா நடைபெற்றது. நல்லூர் ஊராட்சி மன்ற தலைவி செல்வி தலைமை தாங்கினார். பாலக்கோடு தோட்டக்கலை உதவி இயக்குனர் பாஸ்கர் முன்னிலை வகித்தார். இவ்விழாவில் வேளாண்மை விற்பனை மற்றும் வணிக துறையின் சார்பில், தரம்பிரித்தல், மதிப்புகூட்டுதல், சிப்பம் கட்டுதல் குறித்து, கருத்து காட்சி அமைக்கப்பட்டது. தக்காளி, கத்திரி, வெண்டை, உள்ளிட்ட காய்கறிகளை தரம்பிரித்தல் செயல் விளக்கம் பாலக்கோடு வேளாண் வணிகம் உதவி அலுவலர் செல்வம் செய்து காட்டினார். மேலும் பப்பாளி விற்பனை வாய்ப்பு குறித்து அனுபவ வெற்றி விபரத்தினை, பூனையன் கொட்டாயை சேர்ந்த விவசாயி காவேரியப்பன் விவசாயிகளிடையே விளக்கிப் பேசினார். தானிய மேம்பாடு குறித்து விவசாயிகளுக்கு வெண்திரையில் படம் காண்பிக்கப்பட்டது. மேலும் கலை நிகழ்ச்சிகளின் மூலம் வேளாண் வணிக தொழில் கட்டங்கள், திட்டங்கள் குறித்து விளக்கி கூறப்பட்டது. இவ்விழாவில் உழவர் வழிகாட்டி பிரசுரங்கள் வேளாண் வணிகத்துறை மூலம் விவசாயிகளுக்கு வினியோகிக்கப் பட்டது.

**மானாவாரி சாகுபடி பருவமழையை எதிர்நோக்கி விவசாயிகள் காத்திருப்பு**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராமங்களில் தென்னைக்கு அடுத்தப்படியாக மக்காசோளம், பருத்தி, நிலக்கடலை, தட்டைபயிர் உள்ளிட்ட மானாவாரி பயிர்கள் அதிகளவில் விதைக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் விவசாயிகள் மானாவாரி சாகுபடியில் ஈடுபடுகின்றனர். சித்திரை, ஆடி, கார்த்திகை மற்றும் தைபட்டத்தில் பயிர்சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஏப்ரல் மாதம் இறுதியில் ஓரிரு நாட்கள் பெய்த கோடை மழையால், சமத்தூர், பொன்னாபுரம், வடக்கிபாளையம், ராசக்காபாளையம், கோமங்கலம்புதூர், முத்தூர், நல்லிகவுண்டன்பாளையம், கோட்டூர் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் தங்கள் விளை நிலங்களை ஏர் மற்றும் டிராக்டர்களால் உழுது மானாவாரி பயிர்களை விதைக்க தயாராகியிருந்தனர். ஆனால் கோடைமழையும் போதிய ளவு இல்லாததால் விவசாயிகள் வேதனையடைந்தனர். கோடைமழை குறிப்பிட்ட நாட்கள் மட்டுமே பெய்த தால், இந்தமழை விவசாயத்துக்கு போதுமானதாக இல்லை என்பதால் விவசாயிகள் இனி அடுத்து பருவமழையை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர். கடந்த ஆண்டு ஜூன் இறுதியில் தென்மேற்கு பருவமழை பெய்தது. அதுபோல் இந்த ஆண்டும் ஜூன் மாதம் முன்னதாகவே பருவமழை துவங்குமா என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**வரத்து குறைவால் பழநியில் காய்கறி விலை கிடுகிடு உயர்வு**

பழநி, : வரத்து குறை வால் பழநியில் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. பழநி பகுதி கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. இக்கிராமங்களில் காய்கறி விவசாயம் அதிகளவில் நடைபெறுகிறது. போதிய மழை இல்லாததால் தற்போது விவசா யம் சரிவர நடக்கவில்லை. மேலும், போதிய மின்சாரம் இல்லாததால் கிணற்றுப் பாசனம் மூலமும் விவசாயம் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. வரத்து குறைந்துள்ளதால் சந்தையில் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.
இதுகுறித்து பழநி காந்தி மார்க்கெட்டைச் சேர்ந்த காய்கறி வியாபாரி கண்மணி கூறியதாவது: வரத்து குறைவு காரண மாக காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்பு கிலோ ரூ.24க்கு விற்பனையான தக்காளி தற்போது கிலோ ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.32க்கு விற்பனையான முதல் தர வெங்காயம் கிலோ ரூ.60க்கும், கிலோ ரூ.100க்கு விற்பனையான பட்டர் பீன்ஸ் ரூ.120க்கும், கிலோ ரூ.60க்கு விற்பனை யான பச்சை பட்டாணி ரூ.100க்கும் விற்பனை செய்யப்படுகிறது.
இதுபோன்று கிலோ ரூ.48க்கு விற்பனையான கேரட் ரூ.45க்கும், கிலோ ரூ.30க்கு விற்பனையான பாகற்காய் ரூ.48க்கும், கிலோ ரூ.60க்கு விற்பனை யான மல்லித்தழை ரூ.160க் கும், கிலோ

ரூ.20க்கு விற்பனையான உருளைக்கிழங்கு ரூ.30க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மழை பெய்து வரத்து அதிகரித்தால்தான் விலை குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

**நாட்டுக்கோழி குஞ்சுகளுக்கு கரையான் தீவனம் தயாரிப்பு கால்நடைத்துறை ஆலோசனை**

காரைக்குடி, : நாட்டுக்கோழி குஞ்சுகளுக்கு தீவனமாக கரையான் தயாரிப்பு தொடர்பாக கால்நடைத்துறையினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

காரைக்குடி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் அதிக அளவில் கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். கால்நடைகளுக்கான தீவன பொருட்கள் விலை உயர்வு காரணமாக கோழிகளுக்கு கரையான் தீவனங்களை வழங்கலாம் என கால்நடைத்துறையினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கால்நடைத்துறையினர் கூறியதாவது: கரையான் சாப்பிட்ட நாட்டுக்கோழி குஞ்சுகளின் வளர்ச்சி மற்ற குஞ்சுகளை விட இருமடங்காக இருக்கும். கரையானில் புரதம் 36 சதவீதம், கொழுப்பு 44.4 சதவீதம், எரிசக்தி 560 கலோரிகள் உள்ளன. சில வகை கரையான்களில் வளர்ச்சி ஊக்கி 20 சதவீதம் உள்ளது. இதன்மூலம் கோழிக்குஞ்சுகளின் எடை கூடும். கரையான்களை உற்பத்தி செய்ய ஒரு பழைய பானைக்குள் கிழிந்த, கந்தல் துணி, இற்றுப்போன கட்டை, மட்டை, காய்ந்த இலை, ஓலை போன்ற நார் பொருட்கள் ஆகியவற்றை திணித்து அவற்றில் கொஞ்சம் நீர் தெளிக்க வேண்டும். இதனை வீட்டிற்கு வெளியே தரையில் கவிழ்த்து வைக்க வேண்டும். மாலையில் கவிழ்த்து வைத்து, மறுநாள் காலையில் பானையை பார்த்தால் தேவையான கரையான்கள் உற்பத்தியாகி இருக்கும்.

கரையானை உண்ட குஞ்சுகளுக்கு அரைமணி நேரத்துக்கு தண்ணீர் வைக்கக் கூடாது. ஒரு பானையில் சேரும் கரையான் 10 முதல் 15 குஞ்சுகளுக்கு போதுமானது. செம்மண் உள்ள பகுதிகளில் அதிக கரையான்கள் கிடைக்கும். தேவைக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட பானைகளை கவிழ்த்து வைக்கலாம்.

சூரிய உதயத்திற்கு முன்பு கரையான்களை கோழிகளுக்கு இரையாக்க வேண்டும். இல்லாவிட்டால் அப்பகுதியில் உள்ள எறும்புகள் கரையான்களை தின்று விடும்’.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**உற்பத்தி செலவை குறைக்க இயற்கை உரங்களை பயன்படுத்த விவசாயிகள் அதிக ஆர்வம்**

ஆட்டுக்கிடைக்கு அமோக கிராக்கி

சிவகங்கை, : இயற்கை உரங்களை பயன்படுத்த விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவதால் ஆட்டுக்கிடை அமைப்போருக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விவசாயிகள் பயிர்களை பயிரிடுவதற்கு முன்பாக நிலங்களில் ஆடு, மாடு சாணத்தை கொட்டுவர். அதைதொடர்ந்து விவசாயம் செய்வர். இதனால் குறைந்த செலவில் அதிகபடியான மகசூல் கிடைத்தது. ஆனால் தற்போது ஆடு, மாடு வளர்ப்பு குறைந்து வருவதால் சாண எரு கிடைக்காமல், செயற்கை உரத்தை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் ஆண்டுதோறும் விவசாய உற்பத்தி செலவு அதிகரித்து கொண்டே செல்கிறது. இதனால் விவசாயம் நலிவடைந்து வருகிறது. மீண்டும் பல விவசாயிகள் உற்பத்தி செலவை குறைக்கும் வகையில் இயற்கை விவசாய தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க தொடங்கி உள்ளனர். மேலும் உரச்செலவை குறைப்பதற்காக செயற்கை உரங்களின் பயன்பாட்டை குறைத்து, இயற்கை உரங் களை பயன்படுத்த விவசாயிகள் துவங்கியுள்ளனர். இதற் காக விவசாய நிலங்களில் ஆட்டுக்கிடைகள் அமைக்க விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் சிலர் ஆயிரக்கணக்கில் ஆடுகளை வளர்த்து வருகின்றனர். இவர்கள் ஒவ்வொரு ஊராக சென்று விவசாய நிலங்களில் ஆடுகளை கிடை அமைத்து வருகின்றனர். இதற்காக ஒரு ஆட்டிற்கு ரூ.1 முதல் ரூ.2 வரை வாடகை வசூலிக்கின்றனர். ஒரு ஏக்கருக்கு சுமார் ஆயிரம் ஆடுகள் வரை கிடை அமைக்கின்றனர். எனவே ஒரு ஏக்கருக்கு ரூ.ஆயிரம் முதல் ரூ.1,500 வரை செலவாகிறது. இந்த செலவானது செயற்கை உரத்தின் பயன்பாட்டை விட குறைவானதாகும். இதன் காரணமாக ஆட்டுக்கிடை அமைப்போருக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

**கடும் வறட்சியால் கருகிய ஆயிரம் ஏக்கர் கரும்புகள்**

நிவாரணம் கேட்கின்றனர் நிர்க்கதியான விவசாயிகள்

சிவகங்கை, : சிவகங்கை பகுதியில் ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிர்கள் கருகி நாசமாயின. நிவாரணம் அறிவிக்கப்படாததால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சிவகங்கை அருகே இடையமேலூர், தமறாக்கி, மலம்பட்டி, கூட்டுறவுப்பட்டி, ஒக்கூர், மதகுபட்டி, தேவன்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளன. பருவமழை பொய்த்ததால் கிணற்றுப் பாசனம் உள்ள விவசாயிகள் மட்டும் 5 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்துள்ளனர்.

அவர்கள் ஒரு ஏக்கருக்கு ரூ.ஒரு லட்சம் வரை செலவு செய்துள்ளனர். தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாய கடன் வழங்கப்படாததால் தனியார்களிடம் வட்டிக்கு பணம் வாங்கி விவசாயிகள் செலவு செய்துள்ளனர். சிவகங்கை மாவட்டம் முழுவதும் கடுமையான வறட்சி நிலவுவதால், பெரும்பாலான கிணறுகள் வற்றிவிட்டன. இதனால் கரும்புக்கு தண்ணீர் பாய்ச்ச முடிய

வில்லை.

சிவகங்கை சுற்றுப்பகுதியில் மட்டும் சுமார் ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிர்கள் கருகிவிட்டன.

விழிப்புணர்வு இல்லாததால் பெரும்பாலான விவசாயிகள் பயிர் இன்சூரன்சும் செய்யவில்லை. சிவகங்கை மாவட்டத்தில் நெல், மிளகாய் பயிருக்கு மட்டுமே வறட்சி நிவாரணத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளதால், கரும்பு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து தமறாக்கி விவசாயி அசல்ராஜா கூறுகையில், 'பம்புசெட் மோட்டாரை நம்பி 5 ஏக்கரில் கரும்பு பயிரிட்டேன். ஒரு ஏக்கருக்கு ரூ.ஒரு லட்சம் வரை செலவு செய்துள்ளேன். கிணறு வற்றியதால் கரும்புகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. 5 ஏக்கரில் பயிரிட்ட கரும்புகள் கருகிவிட்டன.

கரும்பு பயிரிட்டதால் ரூ.5 லட்சம் வரை கடன் உள்ளது. இன்சூரன்சும் செய்யவில்லை. நிவாரணம் வேண்டி வேளாண்மை அதிகாரிகளிடம் மனு கொடுத்தேன். கரும்புக்கு நிவாரணம் இல்லை என தெரிவித்துவிட்டனர். எனவே நிவாரணம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

**வன விலங்குகளால் பயிர்கள் சேதம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.4.50 லட்சம் நிவாரணம் கலெக்டர் வழங்கினார்**

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில் வன விலங்குகளால் பயிர் சேதம் ஏற்பட்ட விவசாயிகளுக்கு ரூ.4.50 லட்சம் நிவாரண உதவித்தொகையை கலெக்டர் வழங்கினார். திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று, வன விலங்குகளால் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட வன அலுவலர் நாகநாதன் முன்னிலை வகித்தார். வனச்சரகர் கருணாமூர்த்தி உள்பட பலர் கலந்துகொண்டனர். திருவண்ணாமலை, புதுப்பாளையம், தானிப்பாடி, செங்கம், சாத்தனூர் வன சரகங் களுக்கு உட்பட்ட சொரகொளத்தூர், ஆண்டாப்பட்டு, புதூர்செங்கம், ஆதமங்கலம், மேல்ராவந்தவாடி, வெங்காயவேலூர், முன்னூர்மங்கலம், அடிவாரம், வீராணம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் யானைகள், காட்டுப்பன்றி உள்ளிட்ட வன விலங்குகளால் பயிர் சேதம் ஏற்பட்ட 52 விவசாயிகளுக்கு நேற்று நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டது. வனத்துறை சார்பில் ரூ.4.50 லட்சம் மதிப்பிலான நிவாரண உதவியை, கலெக்டர் விஜய்பிங்ளே வழங்கினார். அப்போது, யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதை நிரந்தரமாக தடுக்கவும், காட்டுப்பன்றிகளின் தொல்லைகளில் இருந்து பயிர்களை காப்பாற்ற சூரிய சக்தி தடுப்பு வேலி அமைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் தரப்பில் கோரிக்கை வைத்தனர்.

**ஆத்தூர், நரசிங்கபுரம் பகுதியில் விளை நிலங்களில் தண்ணீர் உறிஞ்சி விற்பனை செய்வதை தடுக்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**

ஆத்தூர், : ஆத்தூர், நரசிங்கபுரம் பகுதியில் விளை நிலங்களில் தண்ணீர் உறிஞ்சி விற்பனை செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சேலம் மாவட்டம் ஆத்தூர், கெங்கவல்லி, வாழப்பாடி தாலுகாவில் விவசாயம் பிரதான தொழிலாகும். தற்போது இந்த பகுதியில் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டுள்ளதால் இந்த பகுதியில் உள்ள 30ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய கிணறுகள், ஏரிகள், குளங்கள், கசிவுநீர் குட்டைகள் அனைத்தும் வறண்டு போய் உள்ளன. இதனால் இந்த பகுதிகளில் உள்ள 1 லட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் விளை நிலங்களில் சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. கரியகோயில் அணையை ஒட்டிய பகுதிகளில் ஒரளவு தண்ணீர் உள்ள நிலையில் அங்கு தடையில்லாத மின்சாரம் வழங்கிட வேண்டும். குடிநீர் தட்டுபாட்டினை போக்க உள்ளாட்சிகள் அமைப்புகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதை போல வேளாண்மை துறையினரும் விவசாயத்தை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆத்தூர், நரசிங்கபுரம் பகுதியில் விளை நிலங்களில் போர்வெல் போட்டு அதிலிருந்து தண்ணீரை உறிஞ்சி லாரிகள், டிராக்டர்களில் எடுத்துச் சென்று விற்பனை செய்வதை தடுக்க வேண்டும். அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து விவசாயத்தை காப்பாற்ற வேண்டும் என நரசிங்கபுரம் பகுதியை சேர்ந்த வெற்றிலை, பாக்கு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு மாநில விவசாய சங்க செயலாளர் ராமசாமி கூறியதாவது: தற்போது எந்த ஆண்டும் இல்லாத அளவில் இந்த பகுதியில் வறட்சி நிலவுகிறது. பருவ மழை பெய்யாமல் போனதால் இந்த பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. குடிநீர் தேவைக்காக போர்வெல் போட்டாலே சுமார் ஆயிரம் அடிக்கு மேல் போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாக்கு சாகுபடி முற்றிலும் அழிந்து வருகிறது. பருத்தி, மரவள்ளி, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை பயிரிட முடியாத நிலையில் விவசாயிகள் பரிதவித்து கூலி வேலைக்கு செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர். ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் வீட்டுமனைகாளாக மாற்றப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் விவசாய தொழில் நலிவடையாமல் தடுக்க வேண்டும்.

**பயிர் சாகுபடியின் போது தரமான விதைகளை பயன்படுத்த விவசாயிகளுக்கு வேண்டுகோள்**

கிருஷ்ணகிரி, : தரமான விதைகளை சாகுபடியின் போது பயன்படுத்துங்கள் என கிருஷ்ணகிரி விதைப்பரிசோதனை நிலைய வேளா ண்மை அலுவலர் ஜான் லூர்து சேவியர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது சித்திரை பட்டத்தில் சாகுபடி மேற்கொள்ளப்படும் பயிர்களான கம்பு, எள்

மற்றும் வீரிய மக்காச்சோளம் பயிர்களின் விதைகள் தரமானது தானா என விவசாயிகள் அறிந்து சாகுபடி மேற்கொள்ள வேண்டும்.

விதைகளை வாங்கும் முன்னர், அந்த விதைகளுக்குரிய முளைப்புத்திறன் பகுப்பாய்வு அறிக்கையை கேட்டு சரிபார்க்க வேண்டும். விதைகளின் தரத்தை அறிந்துகொள்ள கிருஷ்ணகிரி நகரில் மோகன்ராவ் காலனி முதல் குறுக்குத் தெருவில் விதை பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் பணி விதை மாதிரிகள் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே அனைத்து விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி ஒரு பணி விதைமாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக `30 மட்டும் செலுத்தி, விதைகளின் தரத்தை அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி சாகுபடி மேற்கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு வேளாண்மை அலுவலர் தெரிவித்துள்ளார்.

**மாம்பழத்தில் இருந்து மதிப்பூட்டிய பொருளாக தயாரித்து விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்**

**வம்பன் வேளாண் மைய தலைவர் தகவல்**

புதுக்கோட்டை, : விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் மாம்பழங்களில் இருந்து பல்வேறு மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக தயாரித்து அதிக லாபம் ஈட்டலாம் என வம்பன் வேளாண் அறிவியல் மைய தலைவர் வைரவன் பேசினார்.

வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நேற்று மாம்பழத்திலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவு பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியினை வம்பன் வேளா ண்மை அறிவியல் நிலைய தலைவர் வைரவன் துவக்கி வைத்து பேசியதாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் மா மரங்கள் 2,252 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. வருடத்திற்கு 45,040 டன் மாம்பழம் உற்பத்தி ஆகிறது. இதில் பெரும்பாலான அளவு மாம்பழம் கொள்முதல் மற்றும் விற்பனையாகிறது. மிகக் குறைந்த அளவில் 5 சதவீதத்திற்கு கீழே ஏற்றுமதி செய்யப்படுகிறது. மா அறுவடை குறுகிய காலத் தில் மட்டும் உள்ளதால் 25 முதல் 30 சதவீதம் மாம்பழம் வீணாகிபோகிறது.

விவசாயிகள் மிகக் குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறது. இதனை கருத் தில் கொண்டு வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் ஒரு நாள் இலவச பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாம்பழத்தை கொண்டு பலவிதமான உணவு பொருட்கள் தயாரிக்கலாம். அதிக விளைச்சல் உள்ள காலங்களில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பழங்களை மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக தயாரித்து அதிக லாபம் ஈட்டலாம். இதற் கான தொழில்நுட்பங்களை விரிவாக தெரிந்து கொள்ள வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தினை அணுகி பயன்பெறலாம் என்றார்.

வேளா ண்மை அறிவியல் நிலையத்தின் உணவியல் துறை உதவிப்பேராசிரியர் கீதா மதிப்பூட்டப்பட்ட பொருட் களை தயாரிக்கும் செய்முறை விளக்கமளித்தார். மேலும் உடனடி பழப் பானம், பழக் கூழ் மற்றும் பதப்படுத்தும் முறை, பழ பவுடர் தயாரித் தல் ஆகியவற்றினை செய்முறை விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. ஆர்வமுள்ள 3 விவசாயிகள் தொழில் முனைவோராக வழிகாட்டப்பட்டது.

**திருத்துறைப்பூண்டி அருகே மாநில அளவில் நெல் திருவிழா மே 25, 26ல் நடக்கிறது**

திருத்துறைப்பூண்டி, : திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் (தனியார்) மாநில அளவிலான நெல் திருவிழா மே 25, 26 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமையில், நபார்டு உதவி பொது மேலாளர் ரவிசங்கர் முன்னிலையில் விழா நடைபெறுகிறது.

இதுகுறித்து நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் கிரியேட் ஜெயராமன் தெரிவித்துள்ளதாவது: விழாவில் பாரம்பரிய நெல், இயற்கை வேளாண் முறையிலான தொழில் நுட்பம், உணவு பாதுகாப்பு, இடுபொருள் தயாரிப்பு, திருந்திய நெல் சாகுபடி முறை, ஒருங்கிணைந்த பண்ணையம், நீர் ஆதார பாதுகாப்பு, இயற்கை வேளாண் விளைபொருள் விற்பனை போன்ற தலைப்புகளில் தனி தனி அரங்குகளில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. இதில் பாரம்பரிய நெல் சாகுபடி குறித்த எளிய தொழில் நுட்பங்களை முன்னோடி உழவர்கள் எடுத்துரைக்கின்றனர். விழாவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ராமசாமி பேசுகிறார். தமிழக அரசின் வேளாண்மை துறை இயக்குநர் முனைவர் ராசேந்திரன் பாரம்பரிய நெல் குறித்த நூலை வெளியிடுகிறார். திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராஜன் உழவர்களுக்கு பாரம்பரிய விதை நெல்லை வழங்குகிறார். இவ்விழாவில், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, மேற்கு வங்காளம், ஒடிசா மாநிலங்களை சேர்ந்த முன்னனி வேளாண் அமைப்பு பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

60 நாள் முதல் 180 நாள் வயதுடைய பாரம்பரிய நெல்விதைகள் அதிலும் வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங் களை தாங்கி வளரக்கூடிய விழாவில் வழங்கப்பட உள்ளது. மேலும் விவரங்களுக்கு 9842607609, 9443320954, 04369&220954 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

**கோடை மழையால் சீசன் களைகட்டும் நேரத்தில் மா விவசாயிகளுக்கு பேரிழப்பு பூக்களில் நீர்கோர்த்து அழுகின**

திருவில்லிபுத்தூர், : மாம்பழம் சீசன் களைகட்டும் நேரத்தில் திடீரென 3 நாட்கள் பெய்த கோடை மழையால் மாம்பூக்களில் நீர்கோர்த்து அழுகி வருகின்றன. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

திருவில்லிபுத்தூர் அருகே உள்ள மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் தனியாருக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் உள்ளன. இங்கு அதிகளவு மா விவசாயம் நடக்கிறது. திருவில்லிபுத்தூரை பொறுத்தவரை செண்பகத்தோப்பு பகுதியில் விளையும் மாம்பழங்களுக்கு எப்போதுமே தேவை அதிகமாக இருக்கும்.

சேலத்து மாம்பழத்திற்கு அடுத்தபடியாக இங்குள்ள மாம்பழங்கள் மிகுந்த ருசியாக இருக்கும். திருவில்லிபுத்தூரில் ஏப் முதல் ஜூன் வரை மாம்பழ சீசன் களைகட்டும். மரங்களில் இருந்து பறிக்கப்படும் பழங்கள் உள்நாடு மட்டுமின்றி, சிங்கப்பூர் மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆனால், எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்தாண்டு மாம்பழம் சீசன் விரைவில் முடிவுக்கு வரும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்தாண்டு மாமரங்களில் அதிகளவு பூக்கள் பூத்திருந்தது. இதனால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். இதற்கிடையே செண்பகத்தோப்பு வனப்பகுதியில் திடீரென 3 நாட்கள் பெய்த கோடை மழையால் எராளமான மாம்பூக்கள் நீர் கோர்த்து அழுகிவிட்டன.

இதனால் காய்க்கும் மாம்பழங்களில் பெரும்பான்மையான மாம்பழங்கள் பூவிலேயே அழுகிவிட்டன. எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்தாண்டு மாம்பழ விலை விவசாயிகளிடம் இருந்து கிலோ ரூ. 35 முதல் 40 வரை வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். பொதுவாக விவசாயிகளிடம் கிலோ ரூ.20 முதல் 25 வரை கொடுத்து வியாபாரிகள் வாங்கிச் செல்வர். ஆனால் இந்தாண்டு கூடுதல் விலை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். நல்ல விலைகிடைக்கும் இந்த நேரத்தில் மாங்காய்கள் காய்ப்பு இல்லாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். செண்பகத்தோப்பு வனப்பகுதியில் பெரும்பாலான தோப்புகளில் மாங்காய் சீசன் நிறைவடைந்த நிலையில் ஒருசில தோப்புகளில் மட்டும் மாங்காய்கள் அதிகளவு உள்ளது குறிப்பிடத்தக்கது. திருவில்லிபுத்தூர் கடை களில் விற்பனை செய்யும் மாம்பழங்கள்கூட வெளியூர் களிலிருந்து கொண்டுவரப் பட்டு விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

**சூறாவளியுடன் கோடை மழை முருங்கை, வாழை மரங்கள் சேதம்**

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் கடந்த இரண்டு மாதங்களாக கோடை வெயில் வாட்டி வதைத்தது. வெயிலின் தாக்கத்தால் வாகன

ஓட்டிகள் அவதை அடைந்து வந்தனர். இத னால் பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை அனை வரும் பாதிக்கப்பட்டனர். சிலர் வெளியில் வருவதை தவிர்த்து வீட்டிலேயே முடங்கினர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு திடீரென சூறாவளி காற்று மழை பெய்தது. இதில் வீராணம் ஏரியின் மேற்கரையில் உள்ள சித்தமல்லி, அகரபுத்தூர், பா.புத்தூர், கருணாகரநல்லூர் ஆகிய பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த முருங்கை, வாழை, எள், சோளம், பாகற்காய் பந்தல் ஆகியவை சேதமானது. இதுகுறித்து பாதிக்கப்பட்ட கருணாகரநல்லூரை சேர்ந்த கண்ணன் கூறும் போது, மிகுந்த சிரமங்களுக்கு இடையே விவ சாயம் செய்து வருகிறோம். இந்தாண்டு பருவமழை பொய்த்ததால் விவசாயம் செய்ய இயலவில்லை. இந்நிலையில் நன்றாக வளர்ந்த சுமார் 1 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட சோளப்பயிர் சூறாவளி காற்றில் அடி யோடு சாய்ந்தது. இத னால் ரூ. 50 ஆயிரத் துக்கும் மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மேலும் விவசாயி ரகுபதி என்பவருக்கு சொந்தமான பாகற்காய் பந்தல், முருங்கை ஆகியவை அடியோடு சாய்ந்து ரூ. 1 லட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டதாக தெரிவித்தார். எனவே மாவட்ட நிர்வாகம் சேதமடைந்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண் டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.
சிதம்பரம்: சிதம்பரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேகமூட்டம் காணப்பட்டது. குளிர்ந்த காற்று வீசியது. வெயில் இல்லாமல் மேகமூட்டத்துடன் குளிர்ந்த காற்று வீசியதால் நகர் முழுவதும் வெப்பத்தின் தாக்கம் குறைந்தது. இதனால் காய்கறி மார்க் கெட், மளிகைக்கடை, துணிக் கடை உள்ளிட்ட இடங்களில் பொதுமக்களின் நடமாட்டம் அதிக மாக காணப்பட்டது. மேலும் பள்ளி மாணவர்களும், சிறுவர், சிறுமிகளும் தெருக்களில் விளையாடினர். திடீர் கோடை மழையால் மக்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்.

**ஏக்கருக்கு 25 ஆயிரம் வறட்சி நிவாரணம் கரும்பு விவசாயிகள் கோரிக்கை**

நாமக்கல், : வறட்சி நிவாரணமாக, ஏக்கருக்கு, சீ25 ஆயிரம் வழங்கவேண்டும் என கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது குறித்து மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்க செயலாளர் நவலடி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:
மோகனூரில் உள்ள, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 2013&14ம் ஆண்டு அரவை பருவத்துக்கு, நாமக்கல், சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ள 7 கோட்டங்களில் இருந்து 3,400 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு, பதிவு செய்யப்பட்டுள்ளது.
இதில், நடவு கரும்பு 600 ஏக்கரும், மறுதாம்பு கரும்பு 2,800 ஏக்கரும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 10 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு பதிவு செய்யப்பட்டு 4.50 லட்சம் டன் கரும்பு அரவை செய்து வந்த நிலையில், தற்போது வெறும் 3,400 ஏக்கர் கரும்பு மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் அரவை பருவம் துவங்கி, ஒரு மாதம் வரை மட்டுமே

ஆலை இயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு தமிழகத்தில், பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட தண்ணீர் பற்றாக்குறையே காரணம். சாகுபடி செய்யப்பட்ட கரும்பு பயிர்களுக்கு, போதிய தண்ணீர் இல்லாததால் 60 சதவீத கரும்பு பயிர்கள் காய்ந்து, விவசாயிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதே நிலை நீடித்தால், எஞ்சியுள்ள கரும்பையும் காப்பாற்ற முடியாத நிலை உருவாகும். தற்போது 6 மாத கரும்பு பயிருக்கு, இதுவரை நடவு கூலி, உரச்செலவு, பார் இழுத்தல் போன்றவற்றுக்காக, ரூ25 ஆயிரம் வரை செலவு செய்துள்ளனர்.

எனவே, வறட்சி நிவாரணமாக, ஏக்கர் ஒன்றுக்கு, ரூ25 ஆயிரம் இழப்பீட்டுத் தொகை வழங்க, ஆலை நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கரும்பு பயிரிடுவோர் சங்க செயலாளர் நவலடி தெரிவித்துள்ளார்.

### திருமழபாடியில் உழவர் பெருவிழா 2 விவசாயிகளுக்கு கைத்தெளிப்பான்

திருமானூர், : திருமழபாடியில் நடந்த உழவர் பெருவிழாவில் 2 விவசாயிகளுக்கு கைத்தெளிப்பானை சமூக நல தாசில்தார் வழங்கினார்.

திருமானூர் ஒன்றியம் திருமழபாடியில் உழவர் பெருவிழா நேற்று நடந்தது. ஊராட்சி தலைவர் கர்ணன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் இளையராஜா முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் செல்வகுமார், வேளாண் உதவி அலுவலர் பாபு, துணை வேளாண் அலுவலர் உலகநாதன், தோட்டக்கலை உதவி அலுவலர் முருகேசன், வேளாண் பொறியியல் துறை உதவி அலுவலர் நெடுமாறன், மீன் வளர்ப்பு துறை அலுவலர் பிலிப், கால்நடை உதவி மருத்துவர் செந்தாமரை, வேளாண் துறை கல்லூரி உதவி பேராசிரியர் யசோதா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் 2 விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்துடன் கைத்தெளிப்பானை சமூகநல தாசில்தார் தண்டாயுதபாணி வழங்கினார். ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரித்தல் பற்றி நீர்வடி பகுதி ராமலிங்கம் செயல்விளக்கம் செய்து காட்டினார். உதவி அலுவலர்கள் முருகன், ராதா, ரமேஷ், ஆத்மா திட்ட வல்லுனர் அன்பழகன் மற்றும் வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். முன்னதாக கால்நடைகளுக்கு சிறப்பு முகாம் நடந்தது. இதில் 558 கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது. உதவி அலுவலர் கொளஞ்சி நன்றி கூறினார்.

### 2,000 பேருக்கு மானியத்தில் தீவனசோள விதைவினியோகம்

பெரம்பலூர், : வறட்சி நிவாரண திட்டத்தில் 2000 பேருக்கு கால்நடை பராமரிப்புத்துறையின்கீழ் மானியத்தில் தீவனசோள விதைகள் வினியோகிக்கப்படுகிறது. பெரம்பலூர் கலெக்டர் தரேஸ் அஹமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழக அரசு ஏழை, எளிய பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இலவச ஆடுகள் வழங்கி வருகிறது. கால்நடைகளில் வறட்சிகால தீவன பற்றாக்குறையை போக்க பல்வேறு தீவன அபிவிருத்தி திட்டங்களை அறிவித்து நிலம் தயார் செய்தல், விதைகள் வாங்குதல், உரங்கள் வாங்குதல், தீவனம் பயிர் செய்தல், பின் நேர்த்தி பணியான களையெடுத்தல், நீர் பாய்ச்சுதல் போன்ற பணிகளுக்காக மானியம் வழங்கி தீவன உற்பத்தியை பெருக்கி அதன்மூலம் பெரம்பலூர் மாவட்டத்தின் பால் உற்பத்தியை அதிகரிக்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து கால்நடை பரா மரிப்புத்துறை மூலம் செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளது. இந்த திட்டத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு பயனாளிக்கு 0.50ஏக்கர் வீதம் 2,000 பயனாளிக்கு 1000 ஏக்கரில் தீவன பயிர் வளர்க்க இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது. இதில் நிலம் தயார் செய்ய, தீவன விதை வாங்க விதை விதைத்தல், உரமிடுதல், களையெடுத்தல், தண்ணீர் பாய்ச்சுதல் பணிக்கு ஒரு அலகுக்கு (0.50 ஏக்கருக்கு) மொத்தமாக ரூ.3400 மானியமாக வழங்க பெரம்பலூர் மாவட்டத்துக்கு ரூ.68 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளிடம் நீர்ப்பாசன வசதி இருத்தல் வேண் டும். 0.50 ஏக்கரில் கட்டாயம் பயிர் செய்ய வேண்டும். வழங்கப்படும் விதையை முழுமையாக பயன்படுத்த வேண்டும். இதன்மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சி யின் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தீவன பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேரவிரும்பும் கால்நடை வளர்க்கும் நபர்கள் தங்களது கிராமத்திற்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் வேளாண் அலுவலர்களை அணுகி விண்ணப்பிக்கலாம்.கலந்து கொண் டனர்.

**தென்னை மரங்களை அதிகம் பயிரிட வேண்டும் வேளாண்துறை ஆலோசனை**

கும்பகோணம், : காலியாக உள்ள நிலப்பகுதிகளில் அதிகளவில் தென்னை மரங்களை பயிரிட்டு கூடுதல் பயன்பெறலாம் என்று விவசாயிகளு க்கு வேளாண்துறையினர் ஆலோசனை தெரிவித்தனர்.

கும்பகோணம் அருகே திருப்புறம்பியத்தில் உழவர் பெருவிழா ஊராட்சி தலை வர் தங்க.தியாகராஜன் தலைமையில் நடந்தது. ஒன்றிய செயலாளரும் நிலவள வங்கி தலைவருமான அழகு.த.சின்னை யன் முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் லட்சுமிகாந்தன், தஞ்சை மாவட்ட உழவர் விவாதக்குழு அமைப்பாளர் ராமதி யாகராஜன், ஒன்றியக்குழு உறுப்பினர் செல்லதம்பி, முன்னோடி விவசாயிகள் ரமேஷ், ராம நாதன், முருகேசன், ஊராட்சி

துணைத்தலைவர் பிச்சைப்பிள்ளை, ஊராட்சி எழுத்தர் கிருஷ்ணமூர்த்தி பேசினர். விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கி வேளாண்மை துறை மாநில திட்டங்களுக்கான துணை இயக்குனர் சீனிவாசன் பேசியதாவது: இந்தியாவின் பாரம்பரிய பயிர் வகை களில் தென்னை முக்கியமானதாகும். தென்னையிலி ருந்து கிடைக்கும் அனைத்து பொருட்களும் சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயனளிக்கிறது. இதன் காரணமாகத்தான் தென்னை கற்பக விருட்சம் என்றழைக்கப்படுகிறது.
உலகளவில் தேங்காய் அதிகம் விளைவிக்கும் நாடுகளில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது. மொத்த தேங்காய் உற்பத்தியில் கேரளாவில் 47 சதவீதமும், கர்நாடகத்தில் 20 சதவீதமும், தமிழகத்தில் 10 சதவீதமும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் தேங்காய் மூலம் 40 சதவீதம் உணவாகவும், 30 சதவீதம் எண்ணெய்க்காகவும், 10 சதவீதம் இளநீராகவும் மீதம் உள்ளவை பிற பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் பெறுவதற்கு காலியாக உள்ள நிலபரப் பில் விவசாயிகள் தென்னை சாகுபடி செய்வ தன் மூலம் கூடுதல் வருவாய் பெறலாம் என்றார்.